# வணிகத்துளிர்

இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி

கொழும்பு

வர்த்தக மாணவர் மன்றம்

1997 - 1998


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FAIZAL FAREED
AHATHTHIMURIPPU

# வணிகத்துளிர்

## 1997 - 1998
## இரண்டாவது மலர்



## வர்த்தக மாணவர் மன்றம்
## இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி
## கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HARROW

## கல்வி நிலயம்

**No. 9,** *ராஜாசிங்க வீதி,*

வெள்ளவத்தை

## A/L, O/L

**வகுப்புக்கள் நடைபெறுகின்றது.**

**A/L ஆசிரியர் குழு**

| | | |
|---|---|---|
| வணிகக் கல்வி | - | V. சிவா |
| பொருளியல் | - | V. சண் |
| கணக்கியல் | - | S. சுமந்திரன் |
| அளவையியல் | - | S.M. ராஜன் |

**O/L ஆசிரியர் குழு**

| | | |
|---|---|---|
| கணிதம் | - | T. ரமேஸ் |
| விஞ்ஞானம் | - | J. R. சூரி |
| வர்த்தகமும் கணக்கியலும் | - | A. அமிர் |
| சமூகக்கல்வி | - | V. சண் |
| தமிழ் | - | S. மகேந்திரராஜா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

பல்லவி

வாழிராம நாதன் இந்து மகளிர் கல்லூரி - எங்கள்
ஈழநாட்டின் தலைநகராய் இலங்கி மிளிரும் கொழும்பு நகரில்

அனுபல்லவி

ஆழித் தமிழ்க்கல்விகலை அள்ளி அன்பாய் நல்கிடுவாள்
ஏழிசை நாம்பாடி அன்னை எழில் புகழை நாட்டிடுவோம்.

சரணம்

செந்தமிழின் நங்கையரின் சீரியநற் பண்புகள்
அந்தமிலாக் கல்வியொடு அழகுக்கலை ஊட்டுவாள்
விந்தைமிகு விஞ்ஞானமும் விளங்கு நல்ல கலைகளும்
தந்த எங்கள் கல்லூரித் தாயைப்போற்றி வாழத்துவோம்.

கற்றுணர்ந்து மெய்ப்பொருள் காண்பதே நல்லறிவெனும்
அற்புதமாம் லசஷீயத்தை அன்னை இவள் கொண்டனள்
நற்புனித கல்வியோடு நாடி இந்து தர்மமும்
பொற்புறவே நல்கும் தாயைப் போற்றி நாளும் பணிகுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*
*From*

# E. K. T.

## Ekhanthan Co., (Pvt) Ltd.

**GENERAL RICE MERCHANTS**
**&**
**COMMISSION AGENTS**

29, OLD MOOR STREET,

COLOMBO - 12.

T' grams: EKHANTHAN

☎: 431830, 445595, 330192

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from Our Chief guest

It gives me great pleasure to give this message on the occasion of the celebration of the "Commerce Day" by the students of your college.

I am happy to indeed to note that your college was started only in 1981 and named after Sir Ponnambalam Ramanathan. During the comparatively short period of seventeen years, your college has steadily expanded and now has almost two thousand students.

Your college has received just recognition when it was raised to National School status in 1994. I note that the commerce stream for the G.C.E. A/L was started only in 1988 and your students have done very well for the school and themselves by producing very good results. It is indeed noteworthy that quite a few of your students have entered the university whilst some have followed courses on Management studies.

Today is a very special day for your commerce students as they celebrate their "Commerce Day" for the third year in succession. I take this opportunity of congratulating them and wishing them every success.

I wish to include a special word of appreciation in this message for the extremely good work done by your energetic Principal, Mrs R. Sivagurunathan and her dedicated staff. The hard work that has been done by them has no doubt contributed in a big way to the success of your college.

I am confident that your college will go from strength to strength in the future and become a leading educational institution for girls in Sri Lanka.

S. Ratnadas
Deputy Managing Director
Celinco Insurance Co. Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

# BRILLIANT INSTITUTE

136, SANGAMITHA MAWATHA
COLOMBO - 13

A/L 1999 / 2000

| | | |
|---|---|---|
| ECONOMICS | : | நவ்பல் |
| BUSINESS STUDIES | : | சிவா |
| ACCOUNTS | : | கலைச்செல்வன் |
| STATISTICS | : | சோதிலிங்கம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசிச் செய்தி

எமது கல்லூரியின் வணிகத்துறை மாணவிகளது வருடாந்த வெளியீடான வணிகத்துளிர் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

முன்னேறிவரும் வணிகத்துறையிலே மாணவர்கள் தமது எதிர்காலத்தை இணைத்துக் கொள்ளத் தக்கதாக அவர்களுக்குப் பயிற்சியளிக்க பாடசாலைக் கல்வியோடு இணைந்த புறக்கிருத்தியங்களும் உதவுவதால் இத்தகைய மன்றங்கள் மாணவர்களுக்குப் பயிற்சிக்களமாக அமைகின்றன.

எமது கல்லூரியில் உயர்தர மாணவர் வணிகப் பிரிவில் மிகச் சிறப்பான பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்று கல்லூரியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்துள்ளனர். எதிர்காலத்திலே இப்பங்களிப்பு அதிகரிக்க வணிக மன்றம் துணையாக இயங்கும் என எதிர்பார்க்கின்றேன்.

இமமன்றத்தின் உதவியோடு எமது மாணவிகள் தத்தம் திறமைகளை வளர்த்துச் சிறந்த பயன் பெற முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, மன்றத்தின் வணிக விழா சிறப்புற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரூ. சிவகுருநாதன்
அதிபர்
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments*

*from*

✤

✤

✤



Sasikala . G

and

Devika . G

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதி அதிபர்களின் வாழ்த்துச் செய்தி

கொழும்பு மாநகரிலே தமிழ்ப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கும் பண்பாட்டுச் சிறப்புக்கும் களம் அமைத்துக் கொடுக்கும் கல்லூரிகளுள் ஒன்றாக விளங்கும் எமது பாடசாலையின் வணிக மன்றத்தின் வருடாந்த வணிக தினத்தையொட்டிய மலர் வெளியீட்டுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

நாட்டின் முன்னேற்றத்தில் இன்று சிறப்பாகப் பங்களிப்புச் செய்யும் பெண்கள், சமுதாய முன்னேற்றத்தில் பங்கு பெறக்கூடிய தகுதியை இன்றைய வர்த்தகக் கல்வி அளிக்கிறது. மாணவரது திறமைக்கு அளவு கோல் அவர்களது செயற்பாடும் பங்களிப்புமேயாகும். அவர்கள் சிறந்த முறையில் செயற்பட உதவுவது இத்தகைய மன்றங்களாகும்.

எமது கல்லூரியின் வணிக மன்றம் பல்வேறு துறைகளில் மாணவரை ஊக்குவித்து எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுக்கும் திறனுள்ளவர்களாகப் பயிற்றுவிப்பதை நாம் பாராட்டுகின்றோம்.

அவர்களது முயற்சி மென்மேலும் வெற்றி பெற நாம் மனமாற வாழ்த்துகிறோம்.

திருமதி ஈ.எஸ். கணேசர்
திருமதியோ. குழந்தைக்குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සුභ පැතුම

## සිත්තර

## කුමරි

## මුතුහර

# The Sunday Leader.

පුවත්පත් ප්‍රකාශකයන් වෙතින්

මල්ටි පැක්ස් (ලංකා) සමාගම



නො : 74

කිංසි පාර,

කොළඹ 8.

දුරකථනය 696526

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி

கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் வர்த்தக மாணவர் மன்றமானது இவ்வருடமும் தனது வணிக தினத்தைக் கொண்டாடும் இத்தினத்தில் வணிகத்துளிர் என்ற சஞ்சிகையின் இரண்டாவது இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம்.

கணணி வேகத்தில் வளர்ந்து வரும் துறையாக வர்த்தகத்துறை காணப்படுகின்றது. அவ்வேகத்துக்கு ஈடுகொடுக்கத்தக்கவகையில் மாணவர்களது அறிவு, திறன் மனப்பான்மைகளை வளர்ப்பதில் எமது மன்றம் தனது பங்களிப்பைச் செய்து வருகின்றது.

இம்மன்றத்தின் வளர்ச்சிக்கு எமது அதிபர் அவர்களது பூரண ஒத்துழைப்பும் உப அதிபர்களது வழிகாட்டலும் வர்த்தக ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களது உந்துதலுமே மிகப்பிரதான காரணங்களாகும்.

இம்மன்றம் இனிவரும் வருடங்களிலும் தனது பணியைத் தொடர எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொறுப்பாசிரியர்கள்

*திருமதி எஸ். ஜெயராஜா*

*திருமதி எஸ். மகேஸ்வரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*
*From*

P

**Y.S.G.P. PANDIAN & CO.**

General Hardware &
Non - Ferrous Metal Merchants
Importers & Exporters

246, Old Moor Street, Colombo - 12
Sri Lanka.

☎ : 325833, 448072
Fax : 00941 - 422975
Telex : 21583 TELECO CEATTN PANDIAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றத் தலைவியின்
# மனம் நிறைந்த வாசகங்கள்

நற்கலைகளில் மேம்பட்டு மிளிர்கின்ற கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் வணிக மாணவர் மன்றத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற "வணிகத்துளிர்" என்னும் சஞ்சிகையானது இவ்வாண்டும் துளிர்ப்பதையிட்டு பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்

எமது கல்லூரி மாணவிகளின் ஆற்றல்களை பிரதிபலிக்கும் வகையில் வெளியிடப்படுகின்ற இந்நூலின் மலர்விற்கு கரம் கொடுத்து உதவியளித்த அதிபர், உப அதிபர்கள் அவர்களுக்கும் எமது மன்றத்திற்கு பேராதரவு வழங்கிய பொறுப்பாசிரியர்களுக்கும், ஏனைய பண்புசால் ஆசிரியர்களுக்கும், தமது மிகையான ஆக்கங்களை எமக்கு நல்கிய அன்புசால் பேரறிவாளர்களுக்கும் வர்த்தகதினம் இங்கு நடைபெறவும் இவ்வணிகத்துளிர் வெளிவரவும் ஆதரவு தந்த இதர மாணவியர்களுக்கும், நேரடியாகவும், மறைமுகமாகவும் அளப்பரிய பங்காற்றி நூலுருப்பெறச் செய்தவர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் இன்புறுகின்றேன்.

இவ்வணிகத்துளிர் தீது சிறிதுமின்றி வற்சரந்தோறும் துளிர்ப்பதற்கும், உங்கள் மத்தியில் நல்வரவேற்பினைப் பெறுவதற்கும், வர்த்தக தினம் செவ்விது நடைபெறுவதற்கும், எமது கல்லூரித்தாயின் நல்லாசிதனை யாசித்து நிற்கின்றேன்.

நன்றி

சசிகலா கணேசமூர்த்தி
தலைவர், வர்த்தக மாணவர் மன்றம்,
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
From

H.K.

# HOTEL KHALPAKA

*VEGETARIAN*

23, 5th Cross Street,
Colombo - 11.

Tel : 430437

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளரின் சிந்தனையிலிருந்து..............

வர்த்தக துறை மேம்படுத்தும் முகமாக எமது வர்த்தக மாணவ மன்றத் தால் இவ்வாண்டு நடாத்தவுள்ள வணிகவிழாவையொட்டி வெளியிடப்படும் "வணிகத்துளிர்" வர்த்தக துறையுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என நம்புகின்றேன். வணிகத்துளிரின் கன்னி வெளியீட்டை தொடர்ந்து வெளியிடப்படும். இத்துளிரை உங்கள் கரங்களில் தவழ விடுவதில் பெருமையடைகின்றேன்.

21ம் நூற்றாண்டை நோக்கி சென்று கொண்டு இருக்கும் இந்நவீன யுகத்தில் வர்த்தக துறையானது பல்வேறுபட்ட மேம்படுத்தலும் தொழிநுட்ப மாற்றங்களாலும் வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வளர்ச்சிகளில் ஏற்பட்ட மாற்றங்களை வர்த்தக மாணவிகளாகிய எம்மால் அறிவுக்கெட்டிய அளவில் ஆக்கங்களை உருவாக்கி மாணவர்களிற்கு வழங்குவதால் பயனடைவர் என எதிர்பார்க்கின்றோம்.

*"எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை*
*செய்நன்றி கொன்ற மகற்கு"*

என்ற திருக்குறளிற்கமைய எமது இதழை குறுகிய காலத்தில் சிறப்புற வெளியிட துணைநின்று உதவிய பெருமைக்கும் மதிப்பிற்குமுரிய அதிபர், உப அதிபர்கள், மன்ற பொறுப்பாசிரியர்கள், ஏனைய ஆசிரியர்கள், ஆக்கங்களை அளித்த அறிஞர்கள், மாணவிகள், மற்றும் அனைவருக்கும் வர்த்தக மாணவர் மன்ற செயலாளர்என்ற நிலையில் உள்ளம் கனிந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

நன்றி

கலானி இராமச்சந்திரன்
செயலாளர், வர்த்தக மாணவர் மன்றம்,
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


With Best Compliments
from

♣

♣ ♣

# Kavitha Traders

Commission Agents and Stockists



13, Market Street,
Negombo.

Tel : 031-33579
031-33938

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியர்
## உள்ளத்தில் இருந்து............

வெள்ளமெனப் பெருகிவரும் சனத்தொகையிடையே இரண்டறக் கலந்திருக்கும் வணிகத்துறையின் மகத்துவம் உலகம் அறிந்த ஒன்று இருப்பினும் மாணவர்களின் மத்தியில் வணிகத்துறையின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதற்காக இராமநாதன், இந்து மகளிர் கல்லூரி வணிகத்துறை மாணவர் மன்றம் வழங்கும் இரண்டாவது "வணிகத்துளிர்" சஞ்சிகை என்பதை இட்டு பூரிப்படைகின்றோம். இச்சஞ்சிகையானது எமது பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமன்றி ஏனைய வணிகத்துறை மாணவர்களுக்கும் உதவும் வகையில் அமைந்திருப்பதையிட்டு வர்த்தக மாணவர் மன்றம் பேருவகை அடைகிறது.

இவ்விதமாக "வணிகத்துளிர்" சூரியப்பிரகாசம் பெறுவதற்கு காரணம் அனைவரினதும் மனப்பூர்வமான ஒத்துழைப்பே ஆகும்.

எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுவரும் மதிப்பிற்குரிவர்களாகிய அதிபர், உப அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், ஏனைய ஆசிரியர்கள் மற்றும் இச்சஞ்சிகை சிறப்புற வெளிவர அனைத்து வழிகளிலும் தமது மனப்பூர்வமான ஒத்துழைப்பை வழங்கிய அனைவருக்கும் எமது மன்றத்தின் சார்பில் இதயபூர்வமான நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம். மேலும் சிறியோர்களாகிய நாம்விடும் தவறுகளையும் பொறுத்தருளுமாறு தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம். தொடர்ந்துவரும் அடுத்து ஆண்டுகளிலும் இச்சஞ்சிகையானது வணிக மாணவ, மாணவிகள் மத்தியில் அறிவுக்களஞ்சியமாக திகழ உங்கள் அனைவரினதும் நல்லாசிகளையும், அறிவுரைகளையும், ஆதரவினையும் இறஞ்சி நிற்கின்றோம்.................

*"வணிகத்துளிர்" வாசகர்கள் மத்தியில்*
*அறிவுக்களஞ்சியமாக திகழட்டும்.*

நன்றி

அருணா, யோகநாதன்.
இதழாசிரியர்,
வர்த்தக மாணவர் மன்றம்.
இராமநாதன், இந்து மகளிர் கல்லூரி
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*
*From*

HOM

# HARVEY MEDICS
# &
# Grocery

Dispensing Chemists Druggist & Grocery.

79, Messenger Street,
Colombo - 12

☎ : 422410


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக தின வாழ்த்து

கவின்கலை விளங்கும் கல்லூரி - நல்ல
பயன் கலை ஓங்கும் கல்லூரி
அருங்குவை நிதியம் அறிவன்றோ - அதை
அள்ளி தருபவள் அவளன்றோ

வந்தது என்றும் வரவன்றோ
செய்தது என்றும் செலவன்றோ
வரவும் செலவும் வாழ்வன்றோ
தத்துவம் உணர்த்திடும் பாடமன்றோ

வர்த்தக கலைமன்றம் வளர்ந்ததுவே
வணிதையர் நாங்கள் உயர்ந்திடவே
வெற்றிக் கனிகள் பறித்திடுவோம்
விந்தைகள் புரிவோம் இத்தரையில்

வீட்டையும் நன்கு ஆட்சி செய்வோம்
நாட்டையும் நன்றே வளர்த்திடுவோம்
வறுமை கோட்டை அழித்திடுவோம்
வளம் பல பெற்று வாழ்ந்திடுவோம்

வணிக கலைமன்றம் வாழியவே
பணிகள் பல செய்து வாழியவே
அணி இளங்கதிரென வாழியவே
மணி ஒளி மதியென வாழியவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from

K. S. S.
193

K.S. SIVASANKARAN PILLAI & CO



193, KEYZER STREET,
COLOMBO - 11.

☎ :326196

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

With Best Compliments
From



# சிவசக்தி SIVASAKTHY සිවසක්ති

**Drugs Merchants, General Merchants**
**&**
**Commission Agents**

**Dealers in: Lever Brothers & Union Carbide Batteries**

BAZAAR STREET,
VAVUNIYA.

T. Phone: 024/2330 Res: 2076
T.Grams: SIVASAKTHY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

***NEW***

# GANESHA
## jewellers

නිව් ගනේෂා ජුවලර්ස්

நியூகணேஷாஜுவலர்ஸ்

267, Galle Road,
Wellawatta,
Colombo - 6.
Tel: 503413

With Best Compliments From

**PROPRIETORS**

V. SOORIYAKUMARAN

V. CHANDRAKUMARAN

# SARAWATHI STORES

**DEALERS IN OILMEN GOODS & ETC.**

12, Wolfendhal Street,
Adamaly Building,
Colombo - 13.
T'phone - 432035
T' Gram - "VEESONS"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கைத்தொழில் மய நாடுகள் (NICS)

இன்றைய உலகப் பொருளாதாரத்தில் கைத்தொழில் மயமாக்கல் என்பது முதன்மையான ஒரு அபிவிருத்திச் செயன்முறையாகக் கருதப்படுகின்றது.

18ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியானது ஒரு புதிய ஐரோப்பாவைக் கட்டியெழுப்புவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது.

சுதந்திரப் போரின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட கைத்தொழில் மயமாக்கல் இன்று அமெரிக்காவினை உலகில் நிறைவேற்று அதிகாரமுடைய ஒரு நாடு என்ற நிலைமைக்கு உயர்த்தி விட்டது.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஐப்பானில் ஏற்பட்ட கைத்தொழில் மயமாக்கல் இரண்டே தசாப்தங்களுக்குள் ஐப்பானை ஒரு பெரும் கைத்தொழில் வல்லரசாக மாற்றி விட்டது.

இத்தகையதொரு கைத்தொழில் மயமாக்கல் பின்னணியின் அடிப்படையிலேய வளர்ந்து வரும் மூன்றாம் மண்டல நாடுகளுக்கிடையே புதிய கைத்தொழில் மய நாடு என்ற எண்ணக்கரு வளர்ச்சி அடைய ஆரம்பித்துள்ளது.

## புதிய கைத்தொழில்மயநாடு (NICS) என்றால் என்ன?

இன்றைய உலகில் கைத்தொழில் துறையில் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் நீங்கலாக மூன்றாம் மண்டல் நாடுகளிலே கைத்தொழில் துறையில் வளர்ச்சியடைந்து குறிப்பிட்ட சில பொருளாதார இலக்குகளை எய்திய நாடுளே புதிய கைத்தொழில் மய நாடுகள் (NICS) New Industrialised Country States எனப்படுகின்றது. இத்தகைய புதிய கைத்தொழில் மய நாடுகள் கிழக்காசியா, மேற்காசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆகிய பிரேதசங்களில் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

இதன்படி புதிய கைத்தொழில் மய நாடு என்ற நிலையினை எய்துவதற்குப் புதிதாக வளர்ந்து வரும் ஒரு கைத்தொழில் நாடு பின்வரும் பொருளாதார இலக்குகளை எய்துல் அவசியமானதாகின்றது.

01. ஆள்வீத வருமானத்தினை 2000 U.S. டொலர்களுக்கும் கூடுதலாக வைத்திருத்தல்.
02. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழிற்துரையின் பங்களிப்பினை 20 சதவீதத்துக்கும் கூடுதலாக பேணுதல்.
03. மொத்த ஏற்றுமதியின் சம்பாத்தியத்தில் கைத்தொழில் எற்றுமதிகளை 20 சதவீதத்துக்குகூடுதலாக வைத்திருத்தல்.
04. பொருளாதார வளர்ச்சியினை ஆண்டு சராசரி 8 சதவீதத்துக்கும் கூடுதலாகப் பேணுதல்.

புதிய கைத்தொழில் நாடுகள் என்ற வகைப்படுத்தலுக்குள் முதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாக ஆசியாவில் நான்கு புலிகள் நாடுகள் (Four Tigers Countring) எனப்படும். தாய்வான், தென்கொரியா, ஹெங்கொங், சிங்கப்பூர்,ஆகிய நாடுகளே உள்ளடக்கப்பட்டன. எனினும் இந்நாடுகள் நீங்கலாக ஆசியாவில் வேலையின்மை விரிவைடந்து கொண்டு செல்லும். சென்மதி நிலுவை நெருக்கடி, பணவீக்கம், குறைக்கவே முடியாத பாதீட்டுப் பற்றாக்குறை தேய்வடைந்து கொண்டிருக்கும் நாணய மாற்று விகிதம், போன்ற பொருளாதார நெருக்கடிகளுக்கு ஒரே தீர்வாக இந்நாடுகள் தமது பொருளாதார வளர்ச்சியினை துரிதப்படுத்துவதனூடாக புதிய கைத்தொழில் மயமாக்கல் நாடுகள் என்ற நிலையை எய்துவதாகும்.

## இலங்கையும் புதிய கைத்தொழில் மயநாடுகளும் (NICS)

பொதுசன ஐக்கிய முன்னனி அரசினது பொருளாதார குறிக்கோள்களில் ஒன்று இலங்கையினையும் ஆசியாவின் முதன்மையான கைத்தொழில் மயநாடுகளின் பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்கான ஏற்பாட்டைச் செய்வதாகும்.

எனினும் இத்தகைய ஒரு இலக்கினை விரைவாக எய்த முடியுமா? என்பது ஒரு பெரும் கேள்விக் குறியாக உள்ளது. புதிய கைத்தொழில் மயநாடு என்ற நிலையினை எய்துவதில் காணப்படும் பல்வேறு வரையறைகளே இச்சந்தேகத்துக்கான காரணமாகும்.

புதிய கைத்தொழில் மயநாடு என்ற நிலையினை எய்த வேண்டுமாயின் ஆண்டு பொருளாதார வளர்ச்சி 8% மேலாகப் பேணப்படுதல் வேண்டும். தற்போதைய இலங்கையின் பொருளாதார வளர்ச்சி ஆண்டு சாராசரி 4%த்திற்கும் குறைவானதாகும். இவ்வளர்ச்சியினை இரட்டிப்பாக்குவதன் மூலமே இலங்கை புதிய கைத்தொழில் மயநாடு என்ற நிலையினை எய்த முடியும். மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, போன்றநாடுகள் NICS பட்டியலில் சேர்ந்துள்ளன. இவை தவிர பிரேசில், ஆர்ஜன்டீனா, கிரீஸ், போர்த்துக்கள் ஸ்பெயின், இஸ்ரவேல், போன்ற நாடுகளும் புதிய கைத்தொழில் நாடுகள் என்ற பட்டியலில் சேர்ந்துள்ளன.

1960 தசாப்தங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய நாடுகளுக்கான பொருளாதார ஆலோசகர் டாக்டர் பேலா பெலஸ்ஸா என்பவரினால் தாய்வான், சிங்கப்பூர், ஹெங்கொங், தென்கொரியா ஆகிய நாடுகளில் செய்யப்பட்ட பெரும் பொருளாதார சீர்திருத்தங்களும் இந்நாடுகள் பின் பற்றிய ஐப்பானின் முன்மாதிரியுமே புதிய கைத்தொழில் மய நாடுகள் என்ற அந்தஸ்தினைப் பெறுவதற்கு ஏதுவாய் அமைந்தது.

## புதிய கைத்தொழில் மயநாடுகள் (NICS) அந்தஸ்தைப் பெறுவதன் முக்கியத்துவம்

உலகம் முழுவதும் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும்அமைப்புச் சீராக்கல் என்பது உலக மயமாக்கல் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய உலக மயமாக்கல் செயற்பாட்டின் கீழ் மூன்றாம் மண்டல நாடுகள் அபிவிருத்தி அடைந்த கைத்தொழில் மய நாடுகளின் போட்டியினை நேரடியாக எதிர் கொள்ள வேண்டிய சவாலை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றது.

இவை தவிர அபிவிருத்தி அடைந்த நாடுகளின் கைத்தொழில் மயமாக்கல் செயன்முறை காரணமான மூன்றாம் மண்டல நாடுகள் பெரும் பொருளாதார நெருக்கடிகளையும் இடர்களையும் எதிர் நோக்க வேண்டி இருக்கின்றன.

குறிப்பாக இந்நாடுகளின் ஏற்றுமதிகளுக்கான சந்தை வாய்ப்பின்மை, நியாயமான விலைகள் கிடைக்கப் பெறாமை, நெகிழ்வற்ற ஏற்றுமதிகள், என்பன முக்கியமானவையாகும்.

எனினும் அரசு தனது இயலளவுக்கும் மேலதிகமாக பாதுகாப்பின் மீது செலவிடும் ஒரு நிர்ப்பந்தத்தின் கீழ் பொருளாதார வளர்ச்சியினை இரட்டிப்பாக்குவது கடினமான ஒரு செயற்பாடாகவே காணப்படும்.

தலா வருமானத்தினை 2000 (டொலர்)க்கு மேலாக வைப்பது மற்றும் ஒரு நிபந்தனையாகும். இலங்கையின் தற்போதைய தலா வருமானம் 840$ ஆகும். இத்தலா வருமானத்தினை 2 மடங்காக உயர்த்துவதன் மூலமே NICS அந்தஸ்தைப் பெறலாம். எனினும் துரிதமாக பெருகி வரும் சனத்தொகை, ஏற்றுமதிகளின் மந்தமான அதிகரிப்பு என்பவற்றின் கீழ் தலா வருமானத்தினை ஒரு குறுகிய காலத்தில் இரட்டிப்பாக்குவது இலகுவானதல்ல.

இதே போன்று எமது கைத்தொழில் உற்பத்திகளினைப் பொருத்த மட்டில் அத்துறை மிகக்குறைவான உள்நாட்டின் கூட்டப்பட்ட பெறுமதியினை கொண்டிருக்கின்றது. இறக்குமதி உள்ளீடுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும். இதன் உண்மையான கூட்டப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் கைத்தொழில் துறையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20% திற்கும் மேலாக உயர்த்துவதும் கடினமான செயற்பாடாகவே காணப்படும்.

எனவே உள்நாட்டு யுத்தத்தினை யாதாயினும் ஒரு வகையில் முடிவுக்கு கொண்டு வருதல், யுத்தத்தின் மீதான 5 மில்லியனுக்கும் கூடுதலான பணத்தினை உற்பத்தித் துறையில் முதலீடு செய்தல், நாடு முழுவதும் சட்டம், அமைதி, ஒழுங்கு, என்பன நிலைநாட்டப்படுதல் என்ற குறிக்கோள்களை எய்தாத வரை இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டுக்கு NICS என்பது ஒரு கற்பனை வாதமாகவே அமைய முடியும்.

S. H. M. நவ்பல்
B. A Hons (Cey) Econ Sp
S. L. P. S Dip - In - Edu
ஜீலான் மத்திய கல்லூரி,
பாணந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
From

✤ ✤

# S. P. Samy & Co. (Private) Ltd

(Sanaga Traders)

*No. 72, 4th Cross Street*
*Colombo - 11.*

உ

AGY

# *ANUSHIYA GROCERY*

DEALERS IN OILMAN & GROCERIES ITEMS

AGY 25, ABDUL HAMEED STREET,
COLOMBO - 12
☎ : 331391, 334917

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகதுறையில் இன்டர்நெட்டின் பங்களிப்பு பற்றி ஓர் கண்ணோட்டம்

21ம் நூற்றாண்டை நோக்கி செல்லும் இவ்வேளையில் நவீன உலகம் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் அடைகின்றது. இத்துறைகளில் ஒன்றான வர்த்தகமும் நவீன உலகத்திற்கேற்ப துரிதகதியில் வளர்ச்சி அடைகின்றது.

வர்த்தகம் என்றால் என்ன என்று நாம் ஆராயும் போது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் நுகாவோரைச் சென்றடையும் வரை மேற்கொள்ளப்படுகின்ற சகல நடவடிக்கைகளும் வர்த்தகம் என்கின்றோம். அதாவது வியாபாரத்தினையும் வியாபாரத்திற்கு தேவையான துணைநிலை சேவைகளான பணம், வங்கி, போக்குவரத்து தொடர்பாடல், காப்புறுதி, களஞ்சியம் என்பவற்றையும் உள்ளடக்கிய தொழிற்பாடே வர்த்தகம் என இதற்கு விளக்கம் கூறலாம். இத்துணைச்சேவைகளில் ஒன்றான தொடர்பாடல் இன்றைய காலகட்டத்தில் வர்த்தகத்தை துரிதமாக நடாத்துவதற்கு ஒரு குறுகிய காலத்தில் வளர்ச்சி அடைந்த ஓர் ஊடகம் ஆகும். இத்தொடர்பாடல் துறையினதும் கணணி துறையினதும் இணைப்பில் தகவல் பரிமாற்றம் இணைந்தபோது தகவல் தொழில்நுட்பம் **(Information Technology)** உருவாகியது. இத்தொழில்நுட்பத்தின் விளைவாக உருவாக்கப்பட்டதே இன்டர்நெட் ஆகும். இது தமிழல் இணையம் என கூறப்படுகிறது.

ஆரம்பகால கட்டத்தில் வல்லரசு நாடுகளான அமெரிக்காவும் ரஷ்யாவும் யுத்தம் புரியும் காலத்தில் அமெரிக்கா தனது பரந்து காணப்படும் இராணுவ கேந்திர நிலையங்களில் ஒரு நிலையம் தாக்கப்பட்டால் கணணி ஊடான தகவல் பரிமாற்றம் தடைப்பட்டு முழு நாடுமே அழிந்துவிடும் என்ற நிலையை அறிந்து பல ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடித்ததே இன்டர்நெட் ஆகும். இதனூடாக ஒரு இராணுவ கேந்திர நிலையத்தில் உள்ள கணணி அழிக்கப்பட்டாலும் மற்றைய கேந்திர நிலையத்தில் உள்ள கணணியின் மூலம் தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளமுடியலாம் என்ற நிலை காணப்பட்டது. இந்த யுத்தம் முடிவடைந்த பின் இதில் நவீன தொழில்நுட்பத்தை புகுத்தி இன்றைய காலகட்டத்திற்கு நடைமுறைபடுத்தப்பட்டது.

இன்டர்நெட் என்றால் என்ன?

கணணிகள் ஒன்றோடு ஒன்று தொடர்புபடக்கூடிய விதத்தில் அவற்றுக்கு இடையே தகவல் தொடர்பு வலைப்பின்னல் அமைப்பை உடையது இன்டர்நெட் எனப்படுகின்றது. இதன் தொடர்பு பற்றி ஆராயும் போது முதலில் இதற்கு தேவையான பொருட்களை பட்டியல் இட்டால் அது வருமாறு அமையும்.

(1) கணணி (computer)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) மோடம் (modem)

(3) தொலைபேசி இணைப்பு (Telecommunication Lines)

(4) தொலைதொடர்பு சொப்ட்வெயர்

மேலே காட்டியவற்றை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்திவிட்டு இணையச்சேவை வழங்கும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அதில் அங்கத்துவம் பெறவேண்டும். அவர் எமக்கு இணைய தொடர்பை வழங்குவதற்காக நாம் ஒரு தொகை பணத்தை அவருக்கு செலுத்தவேண்டும்.

இந்த இணைப்பு நாடு ஒன்றில் பரிமாற்றி கொள்வதில் 2 முறைகள் உண்டு.

(1) உள்ளக தகவல் வலைப்பின்னல் (Local area Network) இது ஒரு நிறுவனத்தின் உள்ளேயே தகவல் பரிமாற்றி கொள்வதை குறிக்கும்.

(2) விசால தகவல் வலைப்பின்னல் (Wide area Network) இது பல நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து தம்மிடையே தகவல்களை பரிமாற்றி கொள்வதை குறிக்கும். இதன் பின் செய்மதிகள் அறிமுகத்தால் பல்வேறு நாடுகளுகிடையே ஆன செய்தி தொடர்பு வளர்ச்சி அடைந்தது. இதன் மூலம் மாபெரும் கணலிவலைப்பின்னல் உருவாகியது. உண்மையில் இன்டர்நெட்டை கட்டுப்படுத்துவதற்கோ உரிமைகோரவோ ஒருவரும் இல்லை. இது சுதந்திரமான ஒரு தகவல் பரிமாற்று முறையாகும்.

இன்டர்நெட்டில் நடைமுறையில் இரு பிரதான விடயங்கள் காணப்படுகின்றன.

(1) உலகளாவிய தகவல் மையம் (World wide web)

(2) இலத்திரனியல் தபால் (Electronic mail)

உலகளாவிய தகவல் மையம் ஓர் சகல துறைகள் பற்றிய விபரங்களை அடங்கிய அளவுக் களஞ்சியம் ஆகும். இதில் உலகில் உள்ள சகல நாடுகளிலும் வெளியிடப்படும் பத்திரிகைகளை வாசிக்கமுடியும். இதில் தொடர்பு கொள்வதற்கு இலகுவாக சில நிறுவனங்கள் சில சொற்பிரயோகங்களை பயன்படுத்துகின்றன. இச்சொற்பிரயோகங்களால் குறைந்த சொற்கள் மூலம் கூட்டிய அளவு தகவல் பரிமாற்றி கொள்ளமுடியும்.

இப்படி சொற்பிரயோகம் பயன்படுத்தும் நிறுவனங்களில் எமக்கு தெரிந்த இலங்கையில் காணப்படும் தமிழ் வாரஇதழ் வீரகேசரி இன்டர்நெட்டில் வருமாறு சொற்பிரயோகத்தை பயன்படுத்துகின்றது. Http:llwww:ccom:lk:Virakesari இதில் www என்றால் World wide web என்று அர்த்தமாகின்றது.

வர்த்தகத்திற்கு இன்டர்நெட் பல வழிகளிலும் உதவுகின்றது. உதாரணத்திற்கு எமக்கு ஒரு பொருளை பற்றிய முழு விபரத்தையும் அறியவேண்டும் என்றால் விளம்பரம் அவசியம். இவ்விளம்பரம் சரியான முறையிலும் இலகுவான முறையிலும் எம்மை வந்து அடைந்தால் தான் அதற்கான கேள்வியை அதிகரிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறையின் அடிப்படையில் எமக்கு ஏதாவது ஒரு பொருள் தேவை என்றால் இன்டர்நெட்டில் எமக்கு தேவையான பொருளின் பெயரை கொடுக்க அங்கு எமக்கு தேவையான பொருளை பற்றிய முழு விபரமும் கிடைக்கும். இதன் மூலம் நாம் எமக்கு தேவையான பொருள் பற்றிய கூடிய தகவல்களையும் தெரிவு அடிப்படையில் பயனுள்ள பொருட்களையும் போலிப்பொருட்களையும் இலகுவாக அறிந்துகொள்ளமுடியும் எனவே நாம் எமது கொடுக்கல் வாங்கலை இலகுவாக மேற்கொள்ளமுடியும்

இதேபோல் எமது தேவையை நிறைவு செய்வதற்கு விரும்பும் பொருளை தெரிவு அடிப்படையில் மேற்கொள்வதற்கு விற்பனை நிலையத்திற்கு செல்லவேண்டும். நாம் விரும்பும் பொருட்கள் அவ்விடத்தில் இல்லாதவிடத்து இன்னுமொரு விற்பனை நிலையத்திற்கு செல்லவேண்டும். இப்படி ஒவ்வொரு விற்பனை நிலையத்திற்கும் ஏறி இறங்கி எமது நேரத்தை செலவிட்டு அப்பொருளை வாங்கிய பிறகு அதை எமது இடத்துக்கு கொண்டு வருவதற்கு போக்குவரத்துச்செலவு ஏற்படும் இதனால் ஒரு பொருளை வாங்குவதற்கு நாம் நேரத்தையும், போக்குவரத்துச் செலவையும் தாங்கவேண்டியுள்ளது. இவ்அசௌகரியங்களை இன்டர்நெட் மூலம் தவிர்க்க முடியும். எப்படி என்றால் இன்டர்நெட்டில் காணப்படும் விளம்பரத்தின் மூலம் விருப்பமான பொருளை தெரிவு செய்து அப்பொருளை உற்பத்தி செய்த விற்பனை நிலையத்துடன் தொடர்புகொண்டு அப்பொருளை ஓடர் (order) செய்தால் அடுத்த சில மணி நேரத்தில் எமக்கு தேவையான பொருள் எமது வீட்டில் இருக்கும். இதற்குரிய பணத்தையும் இன்டர்நெட் மூலம் கொடுக்கலாம். மேலும் சர்வதேச வியாபாரத்திற்கும் இது பெருமளவு உதவுகின்றது. சர்வதேச வியாபாரத்தில் ஏற்றுமதியாளர்கள் தமது பொருட்களுக்கு சிறப்பான சந்தையைத் தெரிவு செய்து கொள்ளவும் இறக்குமதியாளர்கள் தமக்கு சாதகமான நிலைமையில் பொருட்களையும் இறக்குமதியாளரையும் நேர விரயமின்றி தெரிவு செய்து கொள்ளக்கூடியதாகவும் இன்டர்நெட் காணப்படுகின்றது.

இன்டர்நெட்டின் வளர்ச்சியானது வர்த்தகத்துறையில் புதிய அத்தியாயங்கள் பலவற்றை உருவாக்கி உள்ளது. மேலும் பல புதிய அத்தியாயங்களை எதிர்காலத்தில் உருவாக்கக்கூடிய வகையில் இது வளர்ச்சி அடைந்துவரும் என நாம் நம்புவோம்.

தொகுப்பு
R. Pratheema
12B com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# BALASAROJA STORES

*General Merchants & Commission Agents*

No. 192, Prince Street, Tel : 423582. 330886
Colombo - 11,
Celltel No : 072-42330

BRANCH:

BALASAROJA STORES
No. 6, South Lane, Badulla,
Tel: 055-2445

*With Best Compliments From*

**Vinayagar Thunai**

# Devi Trading Company

IMPORTERS & EXPORTERS

60, 4th Cross Street,
Colombo - 11.
Sri Lanka.

T' Phone : 422034
Fax No : 432444


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
from:



# K. Prasanna

*Well Wisher*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

G.S.G
52

ජ. එස්. ජ. සන්ස්

සාමාන්‍ය වෙළෙන්දෝ සහ කොමිස් පිට බඩු බෙදාහරින්නෝ

# G. S. G. Sons

General Merchants & Commission Agents

52, Fourth Cross Street,

Colombo - 11 ☎ : 421489 / 329800

With Best Compliments From

# VIJEYA ENTERPRISE

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

Wholesale Dealers in Rice & Ceylon Produce

RICE හාල් அரிசி

44-B, 4th Cross Street,

COLOMBO - 11 Phone: 437990-338116



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டங்கள், சேவைகள் வரி - (G.S.T)

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதல் மொத்த விற்பனை வரிக்கு பதிலாக 1996ம் ஆண்டின் 34ம் இலக்க சட்டத்தின்படி பொருட்கள், சேவைகள் வரி அறிமுகப்படுத்தப்பட்டது.

பண்டங்கள் அல்லது சேவைகளில் உள்ளூர் நுகர்வின் மீதான வரி இதுவாகும். முதலீடு செய்யப்படும் வேளைகளிலன்றி இறுதி நுகர்வின் செலுத்தப்படும் வரியாக இது அமைகிறது. பண்டங்கள், சேவைகள் வரியை செலுத்துவதற்கு தகுதியான உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்த வர்த்தகர்களை தவிர பதிவு செய்யாத வேறு எவரும் இவ்வரியை அறவிட முடியாது. மாகாண சபைகள் அறவிட்டு வரும் வியாபார வரிக்க புறம்பானதாகவே இந்த வரி அமையும்.

பண்டங்கள், சேவைகள் வழங்கல்கள், இறக்குமதி என்பவற்றிலும் சில பொருட்கள், சேவைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. முதனிலை விவசாயப் பொருள்கள், புத்தகங்கள், நிதிசார் சேவைகள், மருந்தாக்கற் பொருள்கள், உரப்பொருள்களும் விலக்குணவுப் பொருள்களும், பயணிகள் போக்குவரத்து சேவைகள், கல்விசார் சேவைகள், அத்தியாவசிய விவசாய உபகரணங்கள் போன்ற பொருள்கள், சேவைகளுக்கே வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் விலக்களிக்கப்பட்ட வழங்கல்களாக 30 விடயங்களும் விலக்களிக்கப்பட்ட இறக்குமதிகளான 25 பொருள்களும் குறிப்பிடப்படுகின்றது.

பண்டங்கள், சேவைகள் வரி விதிக்கப்படும் வழங்கலின் பெறுமதியானது ஒரு காலண்டில் 500000 ரூபாவுக்கு மேற்பட்ட புரள்வையுடைய போதும், ஒரு ஆண்டின் 1800000 ரூபாவுக்கு மேற்பட்ட புரள்வையுடைய போதும் வரி விதிக்கப்படும். உலகில் 60 நாடுகளில் இவ்வரி அமுலிலுள்ளது. இவற்றுள் 40 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காணப்படுகிறது.

வங்கித்துறை, ஏற்றுமதியாளர்கள் பண்டங்கள், சேவைகள் வரிக்கு உட்படவில்லை. வங்கியானது அடகு வைத்த பொருள்களை விற்கும்போது இவ்வரி செலுத்த வேண்டும்.

பண்டங்கள், சேவைகள் வரிவீதமானது மூன்று வகைப்படும்.

1. நியம வீதங்கள்
2. சலுகை வீதங்கள்
3. ஏற்றுமதிகளுக்கு மட்டுமான பூச்சிய வீதம்

இலங்கையில் நியம வீதமாக 12% அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பண்டங்கள், சேவைகள் வரி அறிமுகப்படுத்தியதன் நோக்கம் பொதுவிலை மட்டத்தைச் குறைப்பதுடன் திறந்த பொருளாதாரகொள்கைக்கு அமைவாக நவீன பொருளாதார நாடுகளின் வரிமுறையை இங்கு அமுல்படுத்துவதற்குமாகும்.

பணடங்கள், சேவைகள் வரி அதிகரித்த பெறுமதி மீதே விதிக்கப்படுகிறது என்பதால் கடந்த காலத்தில் நுகர்வோர் மீது அதிகளவு வரிச்சுமை ஏற்பட்டதினை குறைத்திருப்பதுடன் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வரி கணிப்பிடுவதும் தவிர்க்கப்படுகிறது.

13வது திருத்தச் சட்டப்படி மாகாண சபைகள் அறவிடும் வியாபார புரள்வு வரியை மாகாண சபைகள் தொடர்ந்து அறவிடும். மாகாணசபை இவ்வரியை பொருள்களை வாங்கி விற்போரிடம் மட்டும் அறவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டங்கள், சேவைகள் வரி நடைமுறைக்கு வந்து சில மாதங்களாகியும் இது தொடர்பான குழப்பங்கள் தீர்ந்தபாடில்லை. பெரும்பாலான வர்த்தகர்கள் உள்நாட்டு இறைவரி திணைக்கம் விதித்துள்ள விதிமுறைகளை தவிர்த்து தற்போது ஏற்பட்ட குழப்பநிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி உச்ச இலாபம் உழைப்பதிலேயே ஈடுபடுகின்றனர்.

அநேகமான பண்டங்களைப் பொறுத்தவரையில் முன்பு மொத்த விற்பனை வரியின் வீதத்திலும் பண்டங்கள், சேவைகள் வரி சற்று அதிகரித்துக் காணப்படுகிறது. சில பொருள்களுக்கு குறைந்து காணப்படுகிறது. அத்துடன் முன்பு மொத்த விற்பனை வரி விலையுடன் சேர்த்தே அறவிடப்பட்டது. பண்டங்கள், சேவைகள் வரி தனியாகவே அறவிடப்படுகின்றது. இதன்படி குறித்த பொருளின் விலையிலிருந்து மொத்த விற்பனை வரி தொகையை கழித்த பின் வரும் விலைக்கே பண்டங்கள், சேவைகள் வரி கணிப்பீட்டு விலையுடன் கூட்டப்பட்டு புதிய விலை பெறப்படும்.

ஆனால் வியாபாரிகள் செய்யும் மோசடி யாதெனில் மொத்த விற்பனை வரியை குறித்த பொருளின் விலையிலிருந்து கழிக்காமல் அவ்விலைக்கே பண்டங்கள், சேவைகள் வரி கணிப்பிடுவதால் வாடிக்கையாளர் இரண்டு வரியை செலுத்த வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர்.

பண்டங்கள் சேவைகள் வரி அறவிடும் வியாபாரிகளில் பலர் இவ்வரி செலுத்துபவர்கள் அல்லர். எனவே இவர்கள் வரிவிதிப்பு மூலம் கொள்ளை இலாபம் உழைக்கின்றனர். சில பொருள்களின் பணடங்கள், சேவைகள் வரி வீத அதிகரிப்பால் அப்பொருளின் விலை குறித்த வீதத்திற்கு மேலாக அதிகரித்துக் காணப்படுவதுடன் சில பொருள்களின் வரிவீதம் குறைந்தும் அப்பொருளின் விலை குறையாது உள்ளதையும் காணமுடிகிறது.

வரி செலுத்துவதற்காக தன்னை பதிவு செய்து கொண்டவர் பதிவு செய்ததற்கான பதிவுப்பத்திரத்தைப் பகிரங்கமாகக் காட்சிக்கு வைப்பதுடன் வரி அறவிட்டதற்கான பற்றுச்சீட்டு பதிவு இலக்கம் குறிப்பிட்டு வழங்கவேண்டும். நடைமுறையில் இவ்வாறு இல்லை. அறவிடும் வரிகளில் பெரும் பகுதி அரசை சென்றடையப்போவதில்லை.

கடந்த மாதங்கள் வியாபாரிகளுக்கு பெரும் இலாபம் கொடுத்திருக்கின்றது. பல பொருள்களுக்கு சில இடங்களில் உணவுப்பொருள்களும் உள்ளடங்கலாக பணடங்கள், சேவைகள் காரணமாக விலை ஏற்றம் எனக்கூறி விலைகள் அதிகரித்தன. இவற்றை நன்கு அறிந்திருந்தும் சட்ட நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

பொருள்கள், சேவைகள் வரி சட்டத்தின் பிரிவு 68 (அ) இன்படி இவ்வரியை செலுத்தாமல் ஏய்ப்புச் செய்தால் வர்த்தகர் ஒருவர் குற்றமிழைத்தவராகக் கருதப்பட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு ரூபா 10000/- தண்டப்பணம் அல்லது 6 மாத சிறைத்தண்டனை அல்லது இரண்டுக்கும் ஆளாவார் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மொத்த விற்பனை வரியையும், பணடங்கள், சேவைகளை வரியையும் அறவிடுவோருக்கும் விலக்கமளிக்கப்பட்ட பணடங்களின் மீதும் பதிவு செய்யப்படாத நிலையிலும் வரி அறவிடுவோருக்கும் என்ன தண்டனை என்பது குறிப்பிடப்படவில்லை. காலப்போக்கில் என்ன மாற்றங்கள் இடம்பெற உள்ளது என்பதை அவதானிப்போம்.

**தொகுப்பு: கலானி இராமச்சந்திரன்**
**ஆண்டு 12A வர்த்தகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வணிக மன்றத்தால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பிரிவு 1ல் முதலாம் இடம் பெற்ற கட்டுரை.**

# இலங்கையின் அபிவிருத்தியில் சுதந்திர வர்த்தக வலயத்தின் பங்கு

எந்த ஒரு நாட்டிலுள்ள குடிமகனினதும் அரசினதும் நோக்கம் என்னவெனில், தன் நாடு தன் மக்கள் என்ற ரீதியில் தமது நாட்டை எந்தளவு தூரம் விரைவாக சகல தேவைகளையும் நிறைவு செய்யக்கூடியதாக அபிவிருத்தி செய்ய முடியுமோ அந்தளவு தூரம் அபிவிருத்தி செய்தல் என்பதேயாகும்.

இந்த வகையில் இலங்கையின் அரசும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்ற நிலையிலிருந்து அபிவிருத்தி அடைந்த நாடு என்ற நிலைக்கு காலடி எடுத்து வைக்க காலம் காலமாக பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றது. இதன் அடிப்படையிலேயே இலங்கையில் 1977ம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் இலங்கையில் அபிவிருத்தியை நோக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சுதந்திர வர்த்தக் வலயம் என்பது தனியார் கைத்தொழில் முதலீட்டை அதிகரிக்கும் நோக்கோடு உருவாக்கப்படடது. இது இலங்கையின் அபிவிருத்தியில் முக்கிய திருப்பு முனையாகும். கைத்தொழில் சார்நத பிரதேசமொன்று தெரிவு செய்யப்பட்டு கைத்தொழிலுக்கான பொருளாதார கீழ்கட்டமைப்பை மேற்கொண்டு வெளிநாட்டவர் சுயாதீனமாக முதலிடவும், கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும் என்ற பிரதான நோக்குடனும் அன்னிய செலாவணி வருகை மூலம் இலங்கையில் காணப்படும் சென்மதி நிலுவைப் பிரச்சினையை தீர்த்தல். இதன் மூலம் வரவு செலவு திட்டத்தில் காணப்படும் வரவு செலவு திட்ட பற்றாக்குறை இடைவெளியை நிரப்புதல், வெளிநாட்டு தொழில் நுட்பவியலாளர் வருகை மூலம் தொழில்நுட்ப இடைவெளியை நிரப்புதல், புதிய நவீன தொழில் நுட்பங்களை இலங்கைக்கு வரவழைத்தல், எமது நாட்டில் இருக்கும் வளங்களை உச்சமாகப் பயன்படுத்துதல், இதன் மூலம் மக்களின் வறுமையை ஒழித்தல் அல்லது குறைத்தல், உள்நாட்டு உற்பத்தி ஏற்றுமதியில் கைத்தொழிலின் பங்கை அதிகரித்தல், தொழில் நுட்ப அறிவுடைய சிறந்த முகாமையை உருவாக்கல் போன்ற பல பொதுவான நோக்கங்களுடனும் இது இலங்கையில் கட்டுநாயக்க, பியகம, கொக்கல போன்ற பிரதேங்களில் அமைக்கப்பட்டுள்ளதுடன் இவ்வலயத்திற்கு பொறுப்பாக முதலீட்டு சபையும் அமைக்கப்பட்டுள்ளது.

இச்சுதந்திர வலயத்தில் முதலீட்டை கவரும் நோக்குடன் செய்யப்பட்ட வசதிகளால் கவரப்பட்டு தற்போது யப்பான், தென்கொரிய, ஜேர்மனி, அவுஸ்ரேலியா, இத்தாலி, சிங்கப்பூர், இந்தியா முதலிய நாடுகள் பெருமளவு வெளிநாட்டு முதலீட்டை ஏற்படுத்தியுள்ளன. இங்கு ஆடை தயாரித்தல், உணவு குடிபானம் பதனிடல், பெற்றோலிய தோல் உற்பத்தி, இரசாயன மரமட்பாண்ட, மருத்துவ உபகரண உற்பத்தி போன்ற பல உற்பத்திகள் இந்நாடுகளினால் மேற்கொள்ளப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட நாடுகள் இங்கு முதலீடுகளை மேற் கொள்வதனால் பெற்ற அனுகூலங்களை கண்ணுற்று மேலும் பல நாடுகள் இங்கு முதலீட்டை மேற்கொள்ள ஆவலாக உள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை இச் சுதந்திர வர்த்தக வலயமானது பொருளாதார சமூக கலாச்சார போன்ற பல்வேறு கூறுகளின் முன்னேற்றத்திலும் பெரும் பங்கு வகிக் கின்றது. குறிப்பாக கூறின் இவ்வலய உருவாக்கலால் மொத்த ஏற்றுமதியில் கைத்தொழிலின் பங்கு கூடிச் சென்று 1996ல் 74% மாகக் காணப்படுகின்றது.

குறிப்பாக ஆடைத்தயாரிப்பு இதில் 48% - 49% மாக காணப்படுகின்றது. 1996 ல் அன்னியச் செலாவணி உழைப்புமாக இதன் மூலம் 133500 மில்லியனும், 242000 பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைத்துள்ளது.

ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது கைத்தொழிற் துறை, விவசாய துறை, சேவை துறை போன்ற சகல துறைகளின் அபிவிருத்தியையே குறிக்கின்றது. ஆனால், சுதந்திர வர்த்தக வலயமானது வெளிநாட்டு முதலீட்டின் மூலம் கைத்தொழில் துறையை பெருமளவு வளர்த்த போதும் விவசாய துறை, சேவை துறையில் பெருமளவு பங்களிப்பு செய்யவில்லை என்பதுடன் வெளிநாட்டு முதலீட்டு அதிகரிப்பால் சில பொருளாதார பாதிப்பும் ஏற்படலாயிற்று. அதாவது, வெளிநாட்டவர் தமது முதலீட்டின் வட்டி இலாபங்களை தமது நாடுகளுக்கே கொண்டு சென்றதால் மீள்முதலீடு குறைந்ததுடன் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட பிரச்சினையும் அதிகரித்தது. அத்துடன் இங்கு முதலீட்டை மேற்கொண்ட பல நாடுகள் தமது உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை தமது நாடுகளின் இருந்தே இறக்குமதி செய்தன. இதனால் உள்நாட்டு வளப்பயன்பாடு குறைந்ததுடன், இறக்குமதிச் செலவு அதிகரித்து தேசிய உற்பத்தியின் உள்நாட்டின் பங்கு குறைவடைந்ததுடன் தேறிய செலாவணி உட்பாய்ச்சலும் குறைவாகவே காணப்படடது. அத்துடன் வெளிநாடுகளில் தங்கியிருத்தல் நிலையும் அதிகரித்தது என்பதுடன் வெளிநாட்டவர் நவீன தொழில் நுட்பத்துடன் தமது உற்பத்தியை மேற்கொண்டதனால் புடவை, தோல், மட்பாண்டம் போன்ற உள்நாட்டு உற்பத்திகள் பாதிக்கப்பட்டன. வெளிநாட்டவர் எமது மனித வளங்களை குறைந்த கூலிக்கு அமர்த்தி உள்நாட்டு வளங்களை பெருமளவு சுரண்டுவதன் மூலம் தமது நாட்டை அபிவிருத்தி செய்தனர் என்பதுடன் பல்வேறு வடிவங்களில் வெளிநாட்டு தலையீடுகளும் அதிகரிக்கத் தொடங்கின.

சுருங்ககூறின் சுதந்திர வர்த்தக வலயமானது இலங்கையின் அபிவிருத்தியில் இவ்வாறான சில பாதிப்புக்களை கொண்டிருந்த போதும் இலங்கையின் கைத்தொழில் துறையின் வளர்ச்சியிலும் அதனூடாக ஏனைய துறைகளின் வளர்ச்சியிலும் குறிப்பிடக்கூடிய ஒரு அமைப்பாகவே காணப்படுகின்றது எனலாம்.

*நிருபா - கந்தசாமி*
*ஆண்டு 9C*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Compliments

of

**N. VAITILINGAM & CO., LTD**

Hardware Merchants



**Head Office/Sales Dept :**

No. 70, K. Cyril C. Perera Mawatha,

Colombo - 13


☎: 433143 - 5

**Branch:**

448, Old Moor Street,

Colombo - 12

☎ : 327488




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

With Best Compliments

From

# NEW LUXUMI TRADE CENTRE

General Merchants & Commission Agents

144, MALIBAN STREET, Tel : 438465

COLOMBO 11. T'gram : "THANIKA"

*With Best Compliments*

*From*

MEMO

# M. T. R. & SONS

General Merchants & Commission Agents

40, 4th CROSS STREET, COLOMBO - 11.

Tel : 432819, 344957


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
From

# OMEGA TRADERS

General Merchants & Commission Agents

☎ : 341747, 432350

No: 62 A, Old Moor Street,

Fax : 434905

COLOMBO - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*
*From*

# Arasan Company

**GENERAL RICE MERCHANTS**

72-A, 4th Cross Street,
Colombo - 11

☎ : 329407, 439797

*With Best Compliments*
*From*

# A.K.L. TRADE CENTRE

*GENERAL MERCHANTS & COMMISSION AGENTS*

AKLT

No. 216, Prince Street,
COLOMBO - 11.

☎ : 327009

T'gram : "HAPPY"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக மன்றத்தால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில்
பிரிவு 2 இல் முதலாம் இடம் பெற்ற கட்டுரை

# தொலைத் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி

காசியிற் செய்வுமுறை காஞ்சியற் கேட்க வேண்டும் என்று கனவு கண்டான் பாரதி. அவன் கனவு நனவாகிவிட்டது. காஞ்சில் மட்டுமல்ல. அகிலெமங்கும் ஒலிக்கக் கேட்கிறோம். கேட்பேதாடு நின்று விடவில்லை. பார்க்கவும் முடிகிறது. மின்னல் வேகத்தில் செய்திப் பரிவர்த்தனை நிகழ்த்திக் காட்டும் தொலைத் தொடர்பு சாதனங்களின் சீரிய வளர்ச்சியே இதன் காரணம் என்பது வெள்ளிடைமலை.

அன்றைய மனிதன் செய்திகளை முரசுறைத்து தெரிவித்தான், தூதுவர்களை அனுப்பினான், பறவைகள் மூலம் பரிமாறிக் கொண்டான். இவற்றின் குறைபாடுகளும், காலதாமதங்களும் அவன் சிந்தனையைத் தூண்டின. இச் சிந்தனை வளர்ச்சியின் சிகரங்களே இன்றைய விஞ்ஞானப் புதுமைகளாம் தொலை தொடர்புச் சாதனங்கள்.

ஆரம்ப காலத்தில் 'முடங்கல்', 'ஓலை', என எழுத்துருவிலே செய்திகள் பரிமாறப்பட்டன. தந்திப் பரிவர்தனை விரைவிலே செய்திகளை அனுப்ப உதவியது. அச்சியந்திரக் கண்டு பிடிப்பும் அயரா ஊக்கமும் பத்திரிக்கைத் துறையிலே புதிய சகாப்பத்தை ஏற்படுத்தின. ஆயிரக்கணக்கான பத்திரிக்கைகளும் சஞ்சிகைகளும் உலகெங்கும் நடைபெறும் நிகழ்வுகளைத் தொகுத்துத் தந்து மகத்தான பணி புரிந்தன. இன்றும் புரிகின்றன.

எழுத்துருவிகளான சாதனங்களைத் தொடர்ந்து ஒலி வடிவிலான சாதனங்கள் புதிய பரிணாமம் பெற்றன. 'தொலைபள்ளி' யின் கண்டுபிடிப்பு தகவல்களை ஒரு நொடியிலே பரிமாற்றம் செய்ய வழிவகுத்தது. ஆழ்கடலின் அடியிலும் கேபிள்கள் அமைக்கப்பட்டு அதன் வழி செய்திகள் பெறப்பட்டமை வியப்பிற்குரியதே. வியாபார நிறுவனங்களிலே 'இன்டகாம்' முறை மூலம் தொடர்பாடல் ஏற்படுத்தப்பட்டது.

விஞ்ஞானத்தின் விந்தைக் குழந்தையாக வந்து எம் சிந்தையை நிறைத்தது மாக்கோனி தந்த "வானொலி" வளி அலைகளிலே தவழும் ஒலி அலைகளை மின் அலைகளாக்கி வீடு தோறும் ஒலிக்க வைக்கும் வானொலி இல்லாத வீடே இல்லையெனலாம். உலகின் மூலை முடுக்கொல்லாம் பரந்து எம் கவனத்தை ஈர்த்துவிட்ட வானொலி மூலம் போர் முனைகளிலிருந்தும் தொலைவிலுள்ள ஆகாய விமானங்கள், கப்பல்களிலிருந்தும் அவசரக் தகவல்கள் விரைந்து பெறப்படுகின்றன.

ஒலி மூலம் பலன் பெற்ற மனிதன் ஒலி ஒளியை இணைத்து அமைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொலைக்காட்சி" தொடர்பு சாதன வரலாற்றிலே ஒரு 'மைக்கல்' என்றே கூறலாம். உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பெறவல்ல தகவல்களை திரட்டித்தரும் சாதனம் இது. பிறநாடுகளுடன் மட்டுமல்ல பிற கோள்களுடனும் தொடர்பாடலை பொற்றுக் கொள்ள முடிகிறது. சந்திரத் தரையிலே தனது முதலாவது காலடியாக பதித்த நீல் ஆம்ஸ்ரோங் "மனித குலத்தின் முதலாவது காலடியை எடுத்து வைக்கின்றேன்" என்று கூறியதை புவியிலிருந்து கண்டும் கேட்டும் மகிழவுற்றமை தொடர்புசாதன வாழ்விலே மறக்க முடியாக நிகழ்வாகும். மயிரினும் மெல்லிய இழைகள் கொண்ட கேபிள்களின் துணையுடன் வீட்டிலிருந்தே தொலைக்காட்சி நிகழ்வுகளில் பங்கேற்குமளவிற்கு இத்துறை விருத்தியைடந்துள்ளது. மண்ணுலக காட்சியெல்லாம் கண்ணெதிரே காண வழி செய்வது தொலைக்காட்சி என்ற பாராட்டையும் பெற்றுள்ளது.

வான்வெளிக்கு அனுப்பபட்ட "செய்மதிகள்" எனப்படும். 'செயற்கைக் கோள்கள்' சுற்றிச் சுழன்று தகவல்களைப் பெற்றுத் தரும் நவீன தொடர்பு சாதனங்களாகும். ஒரு நொடிக்குள் இவை முழு உலகையும் ஒன்றினைத்து செய்திப் பரிமாற்றமும் புரிகின்றன.

இவைத் தவிர "ரெலக்ஸ்,பக்ஸ்" என்பன விஞ்ஞானம் தந்த புதுமைகளாகும். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவசரச் செய்திகளை துரித கதியிலே எழுத்துருவிலே பரிமாற்றச் செய்கின்றன. இதற்கென அமைக்கப்பட்ட இயந்திரங்கள், மனிதரின் தலையீடின்றிய தகவல்களைப் பெற்றுப் பதிவு செய்யும் அற்புதத்தை நிகழ்த்தி காட்டுகின்றன.

இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி வெற்றி நடை போடும் யுகம் கணணியுகம். கல்வி, மருத்துவம், வர்த்தகம் போன்ற துறைகள் யாவுமே கணணி மயப்படுத்தப்பட்டுள்ளன. இன்று இலத்திரனியல் கடிதம் மூலமும் (E-Mail) தகவல் அனுப்பபடுகின்றது. இம்முறையில் ஹாட்டிஸ்க்கில் சேர்த்து வைத்துள்ள தகவல்களை வேறு இடங்கட்கு அனுப்ப முடிகிறது. இன்று பரபரப்பாகப் பேசப்படுவது "இன்டர்நெட்" கணணி முறையாகும். சுற்றுவலை இணைப்புக்கள் மூலம் தகவல்கள் செய்மதி மூலம் பரிமாற்றப்படுகின்றன.

எனவே தொலைத் தொடர்பு சாதனங்களின் பிரமிப்பூட்டும் வளர்ச்சி மனித குலத்தை ஒன்றினைக்கிறது. தொழில் விருத்திக்கு வித்திடுகின்றது. பொன்னிலும் மேலான நேரத்தை மீட்டுத் தருகிறது. இவ்வளர்ச்சி மேலும் சிறக்க வேண்டும். பயன்பல தர வேண்டும்.

செ. நிருஜா

ஆண்டு 11 C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

From

# MODS INSTITUTE



348, Galle Road,
Wellawatte.

☎ : 593334

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best wishes from

# SHANMUGA AGENCIES

DEALERS IN ALL KINDS OF LOCAL PRODUCE &
COMMISSION AGENTS

45, 4th Cross Street, T.Phone: 421943
Colombo - 11. 438467

With Best Compliments
from

M/S SIVASHANMUGARAJAH & CO.,

Dealers All Ceylon Produce & Commission Agents.

45, 4th CROSS STREET,
COLOMBO - 11.
T.Phone : 436077


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக மன்றத்தால் நடாத்தப்பட்ட கட்டுரைப்
போட்டியால் பிரிவு 3ல் முதலாம் இடம் பெற்ற கட்டுரை

# அரசாங்கத்துக்கும் வணிக நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்புகள்

இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனக் கருதப்படும் எமது வளம் மிக்க இலங்கைத் திரு நாடானது 1948ம் ஆண்டு அன்னியராட்சியிலிருந்து விடுபட்டு இன்று பாரிய அளவில் வளர்ச்சியைடந்த ஒரு நாடாகக் காணப்படுகிறது. இலங்கை அரசு தனது 50 ஆவது சுதந்திரத் தினத்தை இவ்வாண்டு கோலாகலமாக கொண்டாடிக் கொண்டிருக்கின்றது என்று கூறுவதற்கு எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும் பங்களித்தே உள்ளது என்று கூறுவது மிகையாகாது.

ஒரு அரசாங்கத்தின் மிக முக்கியமான நோக்கங்களாக

1. ஒரு நாட்டின் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் எய்துதல்.
2. நிறைத் தொழில் மட்டத்தை ஏற்படுத்தல்.
3. சமூக நீதியை நிலைநாட்டுதல்.
4. வறுமையை ஒழித்தல்.
5. பொருளாதார உறுதி நிலையை அடைதல்.

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் எமது அரசும் பல வகையான வணிக நிறுவனங்களையும் அமைப்புக்களையும் பன்னெடுங்காலமாக உருவாக்கிக் கொணடே வருகின்றது.

உதாரணமாக :

1. கைத்தொழில் அபிவிருத்திச் சபை (1969)
2. எற்றுமதி அபிவிருத்திச் சபை (1979)

இவ்வாறாக அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்படும் முயற்சிகளும் மற்றும் தனியாரினால் ஏற்படுத்தப்படும் வணிக நிறுவனங்களும் அரசாங்கத்தின் குறிக்கோள்களையும் தமது தனிக் கோல்களையும் அடையும் முகமாக சிறப்பாக இயங்க வேண்டியது அவற்றின் பாரிய ஒரு கடமைப் பொறுப்பாகும். அதாவது வணிக முயற்சிகள் சமூகப் பொறுப்பையும் மிக முக்கியமாகக் கருத்திற் கொள்ள வேண்டும்.

இவ்வாறாக வணிக முயற்சிகளுக்கு இருக்கின்ற சில கடமைக் கூறுகளை எடுத்து நோக்கும் போது

1. வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்துவதோடு பாரியளவிலான உற்பத்திக்கு வழிவகுத்தல்.
2. தரமான பொருட்களை உற்பத்தி செய்து சந்தைக்கு அனுப்புதல்.
3. அரசாங்கத்தின் வருமான மூலங்களுக்கு செயற்பாட்டு ரீதியாகப் பங்களிப்புச் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வேலைவாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் சமூக நீதியை நிலை நாட்டுதல் எனும் அரசின் குறிக்கோளை இலகுபடுத்தல்.
5. விலைத் தளம்பல்கள் ஏற்படாத வண்ணம் தமது உற்பத்திகளை திறம்படச் செய்வதன் மூலம் விலை உறுதிப்பாட்டுக் கொள்கைக்கு வழிவகுத்தல்.

இவ்வாறாக வணிக நிறுவனங்கள் செயற்பாடு ரீதியாக பங்களிப்புச் செய்வதன் மூலமாக அந்நாட்டு அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் பெருமளவில் உதவக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறாக காலத்துக்கு காலம் ஏற்படுத்தப்படும் வணிக நிறுவனங்களுக்கு எமது அரசாங்கமும் பல வகையான உதவிகளை வழங்கி வருவதைக் காணமுடிகின்றது. எடுத்துக் காட்டாக

1. வரி ஊக்குவிப்புக்கள்.
2. நிதி வசதிகள்.
3. செலாவணி வசதிகள்.
4. உட்கட்டமைப்பு வசதிகள்.
5. நிறுவன ரீதியான சேவை வசதிகள்.

இவ்வாறாக அரசாங்கத்தினால் வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சில வரி ஊக்குவிப்புக்களை எடுத்து நோக்கும் போது

1. வரி விடுதலைகள்
2. சகாய வரிகள் அல்லது வரிச்சலுகைகள்
3. வரி மீளளிப்புத் திட்டங்கள்

போன்றவற்றைப் பிரதானமாக கூற முடியும். மேலும் ஏற்றுமதியாளருக்கும், ஏனைய சர்வேதச வர்த்தகத்தில் ஈடுபடும் பல தனியார்களுக்கும் நிறுவனங்களுக்கும் பின்வரும் பல சேவைகளையும் அரசாங்கம் செய்து கொடுக்கின்றது.

1. ஏற்றுமதிகளுக்கான ஐந்து ஆண்டு வரி நீக்கல் திட்டம்.
2. மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளுக்கான வரி நீக்கல்.
3. விவசாய ஏற்றுமதிகளுக்கான சகாய வரி.
4. கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கு வரிச்சலுகைகள்.
5. இறக்குமதிப் பொருட்கள் சிலவற்றுக்கான வரி மீளளிப்புத் திட்டங்கள்.

இவ்வாறாக பல சேவைகளை ஆற்றி இலங்கையின் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இலங்கை அரசுக்கு பல அளப்பரிய சேவைகளை வழங்கி வருகிறது.

நீதி ரீதியான வசதிகளை அதாவது அரசாங்கம் தன்னுடைய நாட்டின் வர்த்தக முயற்சிகளுக்கு வழங்கும் நிதி ரீதியான வசதிகளாக நாம் பின்வருவனவற்றைக் கருத முடியும்.

1. சாதாரண வங்கிக் கடன்.
2. விசேட நிறுவனங்கள் மூலமான கடன்.
3. பல நிறுவனங்கள் ஒன்றிணைந்து வழங்கும் கடன்.

எனப்பலவற்றைக் கருதக்கூடியதாகவுள்ளது. இவ்வாறாக வர்த்தக முயற்சிகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படும் நிதி வசதிகளை செய்து கொடுக்கும் நிறுவனங்களாக

1. அரச வணிக வங்கிகள்.
    1. இலங்கை வங்கி.
    2. மக்கள் வங்கி.
2. அபிவிருத்தி வங்கிகள்.
    1. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி.
    2. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.
3. ஏனைய நிதியங்கள்
    1. ஜனசவிய.
    2. சமூர்த்தித் திட்டம்.

என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலும் மக்கள் வங்கியினால் வழங்கப்படும்

1. கைத்தொழில் ஏற்றுமதிக் கடன்
2. வீடமைப்புக்கான கடன்
3. விவசாய அபிவிருத்திக்கான கடன்

என்பனவும் பொருளாதாரக் குறிக்கோள்களை அடைவதற்கு மிகவும் இன்றியமையாதவையாக உள்ளன.

மேலும் செலாவணி வசதிகள் மூலமாகவும் எமது அரசு வர்த்தக முயற்சிகளுக்கு பாரியளவில் உதவி புரிந்து வருகின்றது. நாணய மாற்று வீதங்களில் தேவையான அதிகரிப்பு மற்றும் வீழ்ச்சி என்பவற்றுக்கு சர்வேதச அரசுகளுடன் தொடர்புக் கொண்டு சாதகமான பல தொழில் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றுகின்றது.

பல வகையான உட்கட்டமைப்பு வசதியையும் நிறுவன ரீதியான சேவை வசதிகளையும் வழங்குவதன் மூலமாகவும் பல இன்றியமையாத தொழிற்பாடுகளை ஆற்றிவருகின்றது.

1. தொழிற்சாலைகளுக்குத் தேவையான நீர், மின் கட்டிடம், காணி வசதிகளை இயன்ற அளவில் செய்து கொடுத்தல்.
2. பிரதேச ரீதியாகக் காணப்படும் உள்நாட்டு வளங்களைப் பெறுவதற்காக ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல்.
3. தொழிலாளருக்குத் தேவையான பல வசதிகளைச் செய்து கொடுத்தல்.
4. பல வகையான அரச நிறுவனங்களைத் தோற்றுவித்து அவற்றை வினைத்திறனாகச் செயற்படுத்துவன் மூலம் வெற்றி இலக்கை அடைந்து கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்தல்.

இவ்வாறாக எமது அரசு காலத்துக்குக் காலம் பல அரச நிறுவனங்களை உருவாக்கிக் கொள்வதன் மூலம் வணிக நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பெரும் உதவியளித்து வருகின்றது.

1969ம் ஆண்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபையை உருவாக்கியதன் மூலம்

1. உள்ளூர் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய முடிந்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கைத்தொழில் பொருட்களுக்கான சர்வதேச சந்தையை விருத்தி செய்ய முடிந்தமை.
3. பிரதேச ரீதியாக செறிந்து காணப்பட்ட வளங்களைத் திறம்படப் பயன்படுத்த முடிந்தமை.
4. தொழில் வாய்ப்புக்களை வழங்க முடிந்ததோடு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடிந்தமை.

போன்ற பல வெற்றியான செயற்பாடுகளை அடைந்து கொள்ள முடிந்தது.

இவ்வாறாகவே 1979ம் ஆண்டு ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் உருவாக்கப்பட்டு அதன் மூலம் பல வெற்றி இலக்குகளை அடைந்து கொள்ள முடிந்தது. வெளிநாட்டவர் உதவியோடு உலக வர்த்தக அவையமும் (World Trade Centre) இலங்கையில் தாபிக்கப்பட்டது மிகப் பெரும் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்ததாகவே உள்ளது.

அத்தோடு ஜனாதிபதி விருதுகள் திட்டம் மூலமாகவும் வணிக நிறுவனங்களின் வினைத்திறனை தொழிற்பாட்டுக்கு அரசாங்கம் பல உதவிகளைச் செய்து கொடுத்தது.

மேலும் தரக் கட்டளைகள் பணியகம் மூலமாக உற்பத்தியாளரின் உற்பத்திகளின் தரத்தைப் பேணியதோடு நுகர்வோரையும் பாதுகாத்து ஏற்றுமதிகளும் அதிகரிக்கப்பட்டது. இதன் மூலமாக அன்னியச் செலாவணி பல இலங்கைக்குள் கொண்டு வர வாய்ப்பாகவே அமைந்தது. அவ்வாறே இறக்குமதிப் பொருட்களுக்கும் சோதனைக்குட்பட்டு திருப்தியற்ற நுகர்வோர் என்பது உருவாகாமல் பல சேவைகளை ஆற்றி வந்தது.

இவ்வாறாக அரசாங்கத்துக்கும் வணிக நிறுவனங்களுக்குமிடையே உள்ள தொடர்புகளின் அடிப்படையில் அரசாங்கத்தினால் செய்து கொடுக்கப்படும்.பல வகையான சேவையுதவிகளைப் பங்களிக்கும் முகமாக திறமையாக செயற்படுவதே வணிக நிறுவனங்களின் அளப்பரிய கடமையாகும்.

இவ்வாறே அரசாங்கமும் தமது வெற்றி இலக்குகளை அடைந்து கொள்ளும் முகமாக வணிக நிறுவனங்களின் பங்களிப்போடு வணிகத்துறை மாணவர்களாகிய நாமும் பல அளப்பரிய சேவைகளை ஆற்ற வேண்டும். அதன் மூலம் அபிவிருத்தியடைந்த நாடு என இலங்கையையும் நாம் கொண்டு வர முடியும் என்பது உறுதியே.

*தர்மாவதி சிவகுமார்*

ஆண்டு 13B வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

From

# UMA TRADING CENTRE

**GENERAL MERCHANTS & COMMISSION AGENTS**

**UTC** 57 - 59

57, FOURTH CROSS STREET,

COLOMBO - 11.

☎ : 327457 Telegrams : "UMATCO"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

With Best Compliments

From

# GARAN TRADERS

191, 5th CROSS STREET

COLOMBO 11

*With Best Compliments From*

HMR

# H.M.R. PERERA & CO.

WHOLESALE & RETAIL GENERAL MERCHANTS &
COMMISSION AGENTS

211, Prince Street,
Colombo 11.
Phone : 323209


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றின் புதிய கட்டத்திற்குள் பிரவேசிக்கும் புதிய ஹீரோ -"யூரோ" நாணயம்

ஐரோப்பிய நாடுகள் 11 சேர்ந்து உருவாக்கிய ஒரு புதிய ஹீரோவே இந்த யூரோ நாணயம் ஆகும். இந்த நாணயத்தை உருவாக்குவதில் பல சிக்கல்களும் சிரமங்களும் இருந்தன. எனினும் கருத்தொற்றுமை மூலமே இவை வெற்றி கொள்ளப்பட்டன. உலகமயமாதலை நோக்கி உலக நாடுகள் தம்மையறியாமலேயே சென்று கொண்டிருக்கும் போது யூ.ரோ நாணயத்தின் பிரவேசம் புதுமையானது அல்ல. யூரோ நாணயத்துக்கென பரிமாண வளர்ச்சி இருக்கிறது. எவ்வாறாயினும் ஐரோப்பாவின் இந்தப் புதிய நாணய இணைவு ஒரு வரலாற்றுச்சாதனை ஆகும்.

ஒரு நாட்டுக்கு நாணயத்தை உருவாக்குவதும் பல நாடுகளுக்குப் பொருத்தமானதொரு நாணயத்தை உருவாக்குவதும் ஒரு சுலபமான காரியமன்று. இங்கு நாம் ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் ஒப்பிட்டு நோக்குவோம் ஆயின் அமெரிக்கா சுதந்திரம் பிரகடனம் செய்தபின் ஒரு பொதுவான நாணயத்தை (டொலர்) உருவாக்கிக்கொள்ள சுமார் 90 வருடங்கள் தேவைப்பட்டன. அமெரிக்கா மானிலங்கள் அனைத்துக்கும் பொதுவான "சமஷ்டி ரிசர்வ்" முறையை அமைக்க மேலும் 50 ஆண்டுகள் தேவைப்பட்டன. ஆனால் அடுத்தவருடம் (1999) யூரோ நாணயத்தை அறிமுகப்படுத்தும் போது ஐரோப்பிய நாணய ஒன்றியம் 40 ஆண்டுகளில் இச்சாதனையைப் புரிகின்றது.

யூரோவின் தனிச்சிறப்பான அம்சம் என்னவெனில் சுதந்திர நாடுகள் சில தமது சுயாதிபத்தியத்தை சுயவிருப்பத்தின் பேரில் முதற் தடவையாக இணைப்பது தான். வர்த்தக, நாணயப் பாய்வுகளின் பொறியமைவுகளை மேம்படுத்தவும் ஆழமான பொருளாதார அரசியல் ஐக்கியத்தை ஊக்குவிப்பதற்கும் அவை இந்த இணைப்புக்கு இணங்கியுள்ளன.

இந்த யூரோ நாணய அமைப்பில் ஒஸ்ரியா, பெல்ஜியம், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, லக்ஷம்பேர்க், நெதர்லாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகள் பங்குகொள்கின்றன. எனினும் பிரிட்டன், டென்மார்க், கிரேக்கம், ஸ்வீடன் ஆகியவை ஒதுங்கிக்கொண்டுள்ளன.

இந்த புதிய ஹீரோவான யூ.ரோ நாணயத்தை உருவாக்குவதில் பல சிக்கல்களுக்கும் பிரச்சினைக்கும் முகம் கொடுக்க வேண்டியும் உள்ளது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜேர்மனி, லத்தீன், ஸ்கண்டிநேவியா ஆகிய மூன்று ஐரோப்பிய நாணய ஒன்றியங்களும் ஒன்றுக்கொன்று முரணாகவே செயற்பட்டுவந்துள்ளன. சமீப காலத்தில் கூட ஐரோப்பிய நாணய ஒன்றியம் முன்னய திட்டங்களை ஏற்பதும் பின்போடுவதுமாகவே இருந்தது. எனினும் இப்போது இப்பதினொரு நாடுகளும் விவசாயத்தின் தான் வெற்றி பெறுவோம் என நம்புகின்றன. ஏனெனில் முன்பிருந்த நாணய ஒன்றியங்கள் உறுதியான அடித்தளங்கள் இன்றி இருந்தன. ஆனால் இந்த ஒன்றியம் உறுதியான அடித்தளத்தை கொண்டு இருப்பதுடன் கடந்தபல ஆண்டுகளில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணக்குகளில் தீர்வுகண்டு முன்னேற்றம் அடைந்துள்ளன. உதாரணமாக இவ்வொன்றிய நாடுகள் சிலவற்றின் எல்லைகள் தகர்க்கப்பட்டுள்ளபடியால் நாட்டுப் பிரஜைகள் கடவுச்சீட்டு இல்லாமலேயே ஒரு நாட்டில் இருந்து மற்ற நாட்டினுள் செல்லலாம்.

யூரோ நாணயத்தில் பங்குகொள்ளும் நாடுகளின் மத்தியில் வங்கிகளும் திறைசேரிகளும் 7 ஆயிரம் கோடி யூரோவை புழக்கத்தில் இடும். ஐயாயிரம் கோடி யூரோவை ஐரோப்பிய மத்தியவங்கியில் வைப்பாக வைத்திருக்கும். இவ்வரசாங்கங்கள் ஏழுவகை நாணயத்தாள்களை 1200 கோடி யூரோக்களுக்கு அச்சிடும். இவை 1-500 யூரோ வரை பெறுமதி உடையவை ஒரு சதம் மூலம் இரண்டு யூரோ வரையில் 7600 கோடி சில்லறை நாணயங்களை அச்சிடும் 2002ம் ஆண்டில் இந்த நாணயம் புழக்கத்துக்கு வருமுன் 1999 ஜனவரி தொடக்கம் சாதாரண மக்கள் இதைப் பயன்படுத்துவர்.

இந்தநிலையில் இந்த யூரோ நாணயம் சர்வதேச நாணயம் என்ற வகையில் டோலரைப்பின்தள்ளி விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. யூரோ நாணயம் அமெரிக்காவின் சுபிட்சத்தை மறைத்துவிட்டு ஐரோப்பிய மக்களின் வாழ்க்கைத் தரங்கள் உயர்த்திவிடும் என அமெரிக்க ஆய்வு கூறுகிறது. ஏனெனில் அமெரிக்காவின் சனத்தொகை 26 கோடி 80 இலட்சம் யூரோ வலைய நாடுகளின் சனத்தொகை 29 கோடி. அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.2 டிரில்லியன் டொலர் 11 யூரோ நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.9 டிரில்லியல் (ஏனைய 4 நாடுகளும் சேர்ந்தால் 8 கோடி டிரில்லியன் டொலர்).

உலக வர்த்தகத்தின் பங்கு (மொத்த மதிப்பின் சதவீதத்தில்) 19.6% ஆனால் ஐரோப்பிய நாடுகள் ஒன்றியம் 20.9% வரலாறு மிக வேகமாக சென்று கொண்டிருக்கிறது. அமொக்கா தனி நாணயத்தை வெளியிட்டபின் பிரிட்டிஷ் ஸ்ரேலிங் பவுனை உலகின் தலை சிறந்த நாணயம் என்ற நிலையில் இருந்து இறக்க 50க்கும் கூடுதலான ஆண்டுகாலம் பிடித்தது. இது போலவே யூரோ நாணயமும் டொலரை அகற்ற இதே காலப்பகுதி பிடிக்கலாம்.

இந்த நாணய ஒழுங்கமைத்தலுக்கு அமைய ஐரோப்பிய மத்திய வங்கி அமைக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய தலைவர்களின் வாதப்பிரதிவாதங்களுக்கு பின்னர் நெதர்லாந்தைச் சேர்ந்த விம் சென்பெர்க் அதன் தலைவராக ஏகமானதாக நியமிக்கப்பட்டுள்ளார். 11 நாடுகளின் 29 கோடி மக்களின் எதிர்காலப் பொருளாதார வளம், அதற்கான பொறுப்பு இவர் கையில் உள்ளது.

கருத்து அடிப்படையில் ஏற்பட்ட ஒற்றுமையால் பல்வேறு சிறப்புக்களுடன் ஐரோப்பிய நாணய ஒன்றியத்தின் புதிய ஹீரோவாக யூரோ நாணயம் தோன்றி உள்ளது.

தொகுப்பு : தர்ஷனா இரட்ணசிங்கம்
ஆண்டு 12A வர்த்தகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*
*From*



**ICED FISH**

# YASO
# MOHAN

Colombo Central Super Market Complex

COLOMBO - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# M. S. TRAVELS & TOURS
# &
# COMMUNICATION

*AIR TICKETING, I.D.D. CALLS, LOCAL, BINDING*
*PHOTO COPY, STAMP, LAMINATING, VIDEO, AUDIO,*
*CASSETTES & RECORDING, FILM ROLLS ETC.*

S. SASIKUMARAN *(MAYOORAN)*
MANAGER
T. P. 330610

Office :
52, Malay Street,
Colombo - 2
Sri Lanka.

T. P. 423513, 430223
Fax No : 94-1-433878
Dir No : 430401
Pager No :

*With best compliments from*

MAHARAJAH

# ROASTED RED
# RICE FLOUR

வறுத்த அரிசி மா உடனடியாக இடியப்பம், பிட்டு
தயாரிக்க சிறந்தது.

# MAHARAJAH FOOD PRODUCT

18/3 Dr. E.A. COORAY MAWATHA
COLOMBO - 6
☎ : 437990, 338116
FAX : 591139

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார போக்கு

இலங்கையின் பொருளாதார செயலாற்றம் தற்போது அரசாங்கத்தின் பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்கள் காரணமாக முற்றிலும் திசைமாற்றம் பெற்றுள்ளது எனக் குறிப்பிடலாம். சுதந்திரத்திற்கு முன் காலனித்துவ ஆட்சியில் பெருந்தோட்டப் பொருளாதாரம் தாபிக்கப்பட்டதில் இருந்து சுதந்திரம் பெற்ற காலம் வரையில் இலங்கையில் இரட்டைப் பொருளாதாரமொன்று மிகத் தெளிவான இலட்சணங்களுடன் காணப்பட்டது. இரட்டைப் பொருளாதாரமென்பது ஒரே பொருளாதாரத்தினுள் சுயாதீனமான இரு பொருளாதார முறைகள் ஏக காலத்தில் செயற்படுதல் ஆகும். தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட நவீன பொருளாதாரம், வாழ்வாதார விவசாயத்துறையை அடிப்படையாகக் கொண்ட மரபுரீதியான பொருளாதாரம் என்றும் இருதுறைகள் இரட்டைப் பொருளாதாரத்தினுள் உள்ளடங்குகின்றன.

1997ம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் சகலவிதமான பொருளாதாரங்களும் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுடனான மூடிய பொருளாதாரமாக காணப்பட்டது. இக்காலப்பகுதியில் பொருளாதார செயற்பாடுகள் உள்நோக்கிய நோக்கத்தை கொண்டிருந்தன. இறக்குமதி கட்டுப்பாடுகள் அமுல் செய்யப்பட்டன. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. தீவிரமான அன்னியச் செலாவணிப் பிரச்சினை ஏற்பட்டது. உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கான அடித்தளமொன்று இடப்பட்டு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன.

1977ற்கு பின் அறிமுகப்படுத்தப்பட்ட தாராளமயமாக்கல் மற்றும் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் இக்கட்டுப்பாடுகள் மறைமுகமாக நடைபெறுகின்றன. இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் வெளிநோக்கியவையாக அமைந்தன. செலாவணிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி வணிக நடவடிக்கைகளுக்கு செலாவணி வசதியளிக்கப்பட்டது. விலைக்கட்டுப்பாட்டு முறைகளைத் தளர்த்தி கேள்வி நிரம்பல் சக்திகளுக்கேற்ப விலை தீர்மானிக்கப்பட்டது. வெளிநாட்டு வங்கிகளை நிறுவ இடமளிக்கப்பட்டது. ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் அமைக்கப்பட்டன. உட்கட்டைமைப்பு வசதிகளை மேம்படுத்த பெருமளவு முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் அதாவது அரசுக்கு சொந்தமான கூட்டுதாபனங்கள் திணைக்களங்கள், சபைகள் என்பவற்றை தனியார் மயப்படுத்தும் திட்டம் அமுல் செய்யப்பட்டது. இங்கு தனியார் மயமாக்கல் என்பது அரசயாக்கங்கள் தனியார் நடத்த அனுமதிப்பது. அதாவது எந்தெந்தத் துறைகளில் இவ்வளவு நாட்கள் தனியார் முதலீடு நிர்வாகம் செய்யக்கூடாது என்று இருந்ததோ அந்தந்தத் துறைகளில் இப்போது தனியார் பங்கேற்கலாம். தற்போது வெளிநாட்டு முதலீடுகளுக்கு பெருமளவு இடமளித்துள்ளது. இம்முதலீடுகளை அதிகரிக்க பல்வேறு வர்த்தகக் கட்டுபாடுகளும் விதி முறைகளும் வரி முறைகளும் தளர்த்தப்பட்டுள்ளன. 1992ம் ஆண்டை அடுத்து வரும் பத்து ஆண்டுகளை ஏற்றுமதி தசாப்தம் என பிரகடனப்படுத்தப்பட்டது. அத்துடன் 2000ம் ஆண்டில் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில் நாடு (Newly Industrialised Country States) என்ற அந்தஸ்தினை அடைவதே இலங்கை அரசின் நோக்கமாகும்.

இன்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிடையே பேசப்படும் ஒரு பதம் புதிய கைத்தொழில் மயநாடுகள் என்பதாகும். இது குறிப்பது கைத்தொழில் மய நாடுகளுக்கு வெளியே புதிதாகக் கைத்தொழில் முயற்சியினை ஆரம்பித்துள்ள நாட்டின் தலா வருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் கைத்தொழில் உற்பத்தியின் பங்களிப்பு, வருடாந்தப் பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் முன்னேற்றம் காணப்படுதல் அல்லது முன்னேற்றம் கொண்டிருப்பின் அத்தகைய நாடுகள் புதிய கைத்தொழில் நாடுகள் ஆகும்.

புதிய கைத்தொழில் நாடுகள் கொண்டிருக்க வேண்டிய பண்புகளாவன தலா வருமானம் 2000 அமெரிக்க டொலருக்கு சமனாக அல்லது அதற்கு மேலாக இருத்தல், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20%ற்கு அதிகமானவை கைத்தொழில் பொருட்களின் பங்களிப்பாக இருத்தல், அதே போல ஏற்றுமதியிலும் கைத்தொழில் பொருட்களின் பங்களிப்பு 20%ற்கு மேலாக இருத்தல், வருடாந்த சராசரிப் பொருளாதார வளர்ச்சி 8% - 10% இடைப்பட்டதாக இருத்தல், வேலையின்மையின் அளவு குறைவாக இருத்தல்.

ஆசியாவிலே புதிய கைத்தொழில் நாடுகளாக தற்போது இனங்காணப் பட்டவை சிங்கப்பூர், மலேசியா, தாய்வான், இந்தோனேசியா, இந்தியா.

**புதிய கைத்தொழில் நாடுகள் என்ற அந்தஸ்தினைப் பெற மேற்கொள்ள வேண்டிய கொள்கைகள் வருமாறு:-**

பொருளாதாரத்தினை முழுமதாகத் திறந்து விடல், வர்த்தகம் தராள மயமாக்கல், ஏற்றமதிக் கட்டமைப்பில் மாற்றம் மேற்கொள்ளல் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல். உள்ளூர்ச் சந்தையினை விரிவாக்கல், தனியார் மயமாக்கலும், தலையிடாத் தன்மையினையினையும் கொண்ட பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்தல், முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை ஏற்படுத்தல், கீழ்கட்டுமான வசதிகளை செய்வித்தல்.

இன்று உலகப் பொருளாதாரம் முழுவதுமே "சர்வதேச வர்த்தகத்தில் தங்கியிருத்தல்" என்ற நிலைக்குட்பட்டுவிட்டன. இதனால் அபிவிருத்தி அடைந்து வரும் மூன்றாம் உலக நாடுகள் பெரும் நெருக்கடிகளையும் பொருளாதார இடர்களையும் சர்வதேச ரீதியாக சந்திக்கின்றன. இத்தகைய நாடுகள் ஒப்பீட்டு ரீதியில் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. பொருளாதார வளர்ச்சி என்பது மொத்த மெய்தேசிய உற்பத்தியில் ஏற்படும் தொடர்ச்சியான வளர்ச்சியாகும். இது ஒரு நீண்டகாலச் செயற்பாடாகும். இவ்வளர்ச்சியானது நேர்ப் பெறுமானம் கொண்டதாக இருக்க வேண்டும்.

**பொருளாதார வளர்ச்சியில் பின்தங்குவதற்கான காரணங்களாவன:-**

சனத்தொகை அதிகரிப்பு, வேலையின்மை, சென்மதி நிலுவை நெருக்கடி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணவீக்க வேகம், வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையின் வருடா வருட அதிகரிப்பு, நாடுகளுக்குள்ளேயே காணப்படும் யுத்த செலவீன அதிகரிப்பு போன்றன.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தின் பின்னர் கைத்தொழிலை அதிகரிக்கும் நோக்குடன் பல கைத்தொழில் ஆலைகள் நிறுவப்பட்டன. இவற்றில் 75% ஆனவை மேல் மாகாணத்தை சேர்ந்தவை. அரசு நாட்டின் விவசாயத் துறைத்துறையும் ஏனைய சிறு கைத்தொழில்களியும் விட சுதந்திர வர்த்தக வலய கைத்தொழிலுக்கு இன்று கூடியளவு முக்கியத்துவத்தை வழங்குகிறது. ஆரம்பக் காலத்தில் விவசாய ஏற்றுமதி வருமானமே அதிகமாக இருந்தது. ஆனால் இன்று ஏற்றுமதியில் தேயிலை பிடித்திருந்த இடத்தை ஆடைக் கைத்தொழில் பிடித்துள்ளது.

ஒரு நாடு சில வகையான பொருட்களை ஏற்றுமதி செய்து வரும் நடைமுறையை மாற்றி பல வகையான பொருட்களை ஏற்றுமதி செய்ய எடுக்கும் நடவடிக்கை ஏற்றுமதி பண்முகப்படுத்தல் எனப்படும். அதாவது ஏற்றுமதி பொருள் பட்டியலில் அதிக வகையான பொருட்களை இடம் பெறச் செய்தல் ஆகும்.

புதிய கைத்தொழில் மய அந்தஸ்தினை அடைய இலங்கையானது சுதந்திர வர்த்தக வலயத்தை மையமாக கொண்டே செல்கிறது. இதனால் வெளிநாட்டு மூலதன தொழில் நுட்ப உட்பாய்ச்சல்கள் அதிக அளவில் உள்ளன. பெருமளவில் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கைத்தொழில் ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளது. ஏனைய கட்டிட, மின்சார, போக்குவரத்து, தொழில் சாதன, நெடுஞ்சாலை வசதிகள் அதிகரித்துள்ளன. இருந்த போதிலும் இவ்வளர்ச்சி வீதம் புதிய கைத்தொழில் மயநாடு என்ற அந்தஸ்தினை அடையப் போதுமானதல்ல.

இலங்கையைப் பொறுத்த வரையில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் ஊடாக முழுப்பயனையும் இலங்கை பெறவில்லை என்றே கூறலாம். கைத்தொழில் உற்பத்தியில் 90% மானவை ஆடைக் கைத்தொழிலாகவே காணப்படுவதால் ஏனைய பொருள்களின் உற்பத்திகளுக்கான முதலீடுகள் குறைவு. பெருமளவு ஏற்றுமதி வருமானம் முதலீடு செய்த நாட்டிற்கே போய்ச் சேருகின்றமை, வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்க வரிச்சலுகைகளை வழங்குவதால் உள்நாட்டு முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவதோடு அரசுக்கு கிடைக்கக் கூடிய வரி வருமானம் கிடைக்கலாம் போகிறது. சுதந்திர வர்த்தக் வலயங்கள் காணப்படும் பிரதேசங்களில் மட்டுமே ஏனைய கீழ்க்கட்டுமான வசதிகள் அபிவிருத்தி அடைந்துள்ளன.

புதிய கைத்தொழில் மய நாடு என்ற அந்தஸ்தினை பெற இத்தகைய குறைபாடுகளை இனங்கண்டு அவற்றிற்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தனது நோக்கத்தை அடைந்து கொள்ளலாம்.

**செ. மாதங்கி**

ஆண்டு 13 வர்த்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தயவு செய்து எமது விளம்பரதாரர்களை ஆதரியுங்கள்



**வர்த்தக மாணவர் மன்றம்**
**இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி**
**கொழும்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from

# T. M. B. ENTERPRISE



No. 18, 4th CROSS STREET,
COLOMBO - 11.

☎ : 338239, 434244

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best compliments from

R. Neethirajasarma

*HURU KIRI ARTS*

COMMUNICATION

Wedding Organising
T.V. Productions
T.V. Advertising & Air Ticketing

**Res :**
131, Kew Road,
Colombo - 2
Tel : 074 713317 - 074 713318

**Contact :**
52, De. Mel Street,
Colombo - 2
Tel : 077 304010

*WITH BEST COMPLIMENTS FROM*

**RAJESWARY INSTITUTE**

*G.C.E. O/L*
*TEACHERS PANEL*

| | | |
|---|---|---|
| MATHS | - | **V. KUMARAN** |
| SCIENCE | - | **V. BABU SHARMA** |
| TAMIL | - | **S.S. ANANDAN** |
| SOCIAL STUDIES | - | **M. FAIZAL** |
| ENGLISH | - | **SURESH** |
| COM/ACCOUNTS | - | **V. MOHAN CHANDRAN** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகத்திற்கு காப்புறுதியின் பங்களிப்பு

1815ம் ஆண்டு பிரித்தானியர் முழு இலங்கையையும் கைப்பற்றியதைத் தொடர்ந்து இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. நாட்டின் பல நவீன பல வர்த்தக நடவடிக்கைகளின் பரம்பல்களுக்கு ஏதுவான பின்னனிகளை உருவாக்கியது. இவ்வகையில் பிரித்தானியரின் வருகையின் பின்னரே இலங்கையில் காப்புறுதி அறிமுகம் செய்யப்பட்டது என்று கூறுவது மிகையாகாது.

இதற்கமைய 1833ம் ஆண்டில் இங்கிலாந்தின் கொமர்சல் யூனியன் அசுரன்ஸ் கம்பனியின் (Commercial Union Assurance Company) இலங்கை முகவராக பௌலி றிச்மன் அன்ட் கம்பனி (Fawly Ritchman and Company) இருந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வாறாக அக்காலத்தில் காப்புறுதி முகவர்களாகக் கடமையாற்றிய பல தனியார் கம்பனிகளும் உண்டு.

உதாரணமாக 1. ஏ. பிறவுண் & ஜோன் பிளக் கம்பனி
(A. Brown & John Black Company)
2. ஜே. ஜிப்சன் தொம்சன் & கம்பனி
(J. Gibson Thomson & Company)

மேலும் 1865ம் ஆண்டுகளிலேயே இலங்கையர் முதன்முதலில் காப்புறுதி நடவடிக்கைகளில் ஈடுபடத்தொடங்கினர். இவ்வாறாக இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட காப்புறுதி வணிகமானது இன்று மிகப் பாரிய அளவில் வளர்ச்சியடைந்த ஒரு துறையாகக் காணப்படுகின்றது.

இவ்வகையில் காப்புறுதி என்றால் என்ன? என்பதை எடுத்து நோக்கும் போது ""நிச்சயமான" அல்லது "நிச்சயமற்ற" சில நிலைமைகளினால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பண நஷ்டங்களை ஈடுசெய்வதற்காக காப்புறுதி அளிப்போருக்கும், காப்புறுதி செய்வோருக்கும் இடையிலான ஓர் உடன்படிக்கை" எனலாம். அதாவது பகுதியளவிலோ முழு அளவிலோ கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் குறித்த நபருக்கு ஏற்படும் நட்டங்கள், அபாயங்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக இரு கட்சியினர்களுக்கிடையே உருவாக்கப்படுகின்ற ஒப்பந்தமாகும்.

காப்புறுதி ஒப்பந்தத்தோடு தொடர்புடைய கட்சியினர்களை எடுத்து நோக்கும்போது,

1. **முதலாம் கட்சியினர் :-**

காப்புறுதி ஒப்பந்தமொன்றை உருவாக்குவதற்கு முதன் முதலில் முனையொன்றைச் சமர்ப்பிப்பவர்கள் அதாவது, காப்புறுதி செய்பவர்கள் முதலாம் கட்சியினர் எனப்படுவர்.

2. **இரண்டாம் கட்சியினர் :-**

காப்புறுதி முனைவைச் சமர்ப்பிப்பவர்கள்களிடமிருந்து அதனை ஏற்றுக் கொண்டு ஏற்படும் நட்டங்களுக்காக நட்டஈடு வழங்க உறுதி அளிப்பவர்கள் அதாவது, காப்புறுதிச் சேவையில் ஈடுபடும் நிறுவனங்கள் இரண்டாம் கட்சியினர் எனப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **மூன்றாம் கட்சியினர் :-**

காப்புறுதி உடன்படிக்கையோடு நேரடியாகத் தொடர்புகளில்லாத, ஆனால் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் நட்டஈட்டைப் பெறுவதற்கு உரிமையுள்ள ஏனைய நபர்களும் சொத்துக்களும் மூன்றாம் கட்சியினர் எனப்படுவர்.

**காப்புறுதி உடன்படிக்கை :-**

காப்புறுதி செய்பவருக்கும், காப்புறுதி அளிப்பவருக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளப்படும் எழுத்து மூலமான ஒப்பந்தத்தையே காப்புறுதி உடன்படிக்கை எனலாம். அதாவது காப்புறுதியின் மூலம் பாதுகாப்பைக் கோரிக் காப்புறுதி செய்பவர் முன் மொழியும் முனைவைக் காப்புறுதி அளிக்கும் நிறுவனம் ஏற்றுக் கொண்டு அவ்வடிப்படையில் அவ்விரு கட்சியாளருக்குமிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஓர் எழுத்துருவிலான உடன்பாடு எனலாம். மேலும் இது காப்புறுதி செய்பவருக்கும், காப்புறுதி அளிப்பவருக்கும் இடையில் உடன்படிக்கை உண்டென்பதைக் காட்டும் அத்தாட்சியாக அமைந்த ஆவணமாக இது அமையும்.

**காப்புறுதித் தத்துவங்கள் :-**

1. காப்புறுதி செய்யத்தகு உரிமை (Insurable Interest)
2. அதிகளவின நம்பிக்கை (utmost good faith)
3. இழப்பீட்டு உறுதி (Indeminity)
   (i) பதிலாள் வைப்புத் தத்துவம் (Subnogation)
   (ii) அண்மைக் காரணங்கள் (Proximate cause)
   (iii) பகிர்ந்தளித்தல் தத்துவம் (Contribution)

**காப்புறுதி செய்யத்தக்க உரிமை :-**

ஆயுள் அல்லது ஒரு பொருள் மீது ஒருவர் காப்புறுதி செய்யவிரும்பின் அக்குறித்த நபருக்கு அவ்வாயுள் மீதும் அல்லது அப்பொருள் மீதும் சட்டரீதியான தொடர்போ உரிமையோ இருத்தல்வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவது காப்புறுதி செய்யத்தக்க உரிமை ஆகும். அதாவது ஒருவர் குறித்த சொத்தை வைத்திருப்பதனால் அல்லது ஒரு ஆயுளினால் நன்மைகளையும், அதனை இழப்பதனால் தீமைகளையும் அனுபவிப்பாராயின் அவர் அச்சொத்துக்கள் ஆயுளின் மீது காப்புறுதி செய்வதற்கு உரிமையுடையவர் என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

உதாரணம் :-

1. தன்னுடைய ஆயுள் அல்லது மனைவியின்/கணவரின் ஆயுள் குறித்து இரு பகுதியினருக்கும் ஒவ்வொருவரின் ஆயுளுக்காகவும் காப்புரிமையுடையவர்கள்.
2. கடன் கொடுத்தவர் கடன்பட்டோர் ஆயுளின் மீது கடனின் அளவுக்குக் காப்புரிமையுடையவர்.
3. வியாபாரிக்குத் தனது வியாபார ஆதனங்கள் மீதுள்ள உரிமை.

**அதிகளவான நம்பிக்கை :-**

அதிகளவு நம்பிக்கை என்பது காப்புறுத்துவோன், காப்புறுதி செய்வோன் ஆகிய இருபகுதியினரும், உச்ச நம்பிக்கையோடு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கடமை செய்தல் அவசியம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அதாவது, காப்புறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படும் விடயம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் காப்புறுதி செய்வோனும், காப்புறுதி அளிப்போனும் பரிமாற்றிக் கொள்வது அவசியமாகும்.

காப்புறுதி பெறுவோன் பொய்யான தகவல்களைக் கொடுத்திருப்பது வெளிவந்தால் உடன்படிக்கையை நிராகரித்து நட்டஈடு வழங்காது விடுவதற்கு காப்புறுதி அளிப்போனுக்குப் பூரண உரிமை உண்டு.

**இழப்பீட்டு உறுதி :-**

இத்தத்துவமானது காப்புறுதியில் இலாபம் உழைப்பதைத் தடுக்கும் முகமாக அமைகின்றது. அதாவது காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் சொத்து ஒன்றுக்கு நட்டம் ஏற்படும்போது குறித்த நட்டத் தொகையையே அன்றி அதற்குக் கூடுதலான அளவுத் தொகையை காப்புறுதிக் கம்பனியிடமிருந்து பெறமுடியாது என்பதாகும்.

உதாரணம் :-

ரூ 1,000,000 பெறுமதியான தொழிற்சாலைக் கட்டடமொன்றுக்கு தீக்காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. ஏற்பட்ட ஒரு தீவிபத்தின் காரணமாக தொழிற்சாலையில் ரூ 150,000க்கு சமமான பெறுமதி சேதமடைந்ததால் காப்புறுதித் தாபனம் ரூ 150,000/- ஐயே நட்டஈடாக வழங்கும்.

ஆனால் மேற் கூறப்பட்ட 1,000,000/- பெறுமதியான தொழிற்சாலை 500,000க்கு தீக்காப்புறுதி செய்யப்பட்டால் காப்புறுதிக் கம்பனி வழங்கும் இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு கணிக்கப்படும்.

$$\text{இழப்பீடு} = \frac{\text{காப்புறுதி செய்யப்பட்ட தொகை}}{\text{சொத்தின் பெறுமதி}} \times \text{ஏற்பட்ட நட்டம்}$$

$$= \frac{500,000}{1,000,000} \times 150,000$$

$$= 75,000$$

**பதிலாள் வைப்புத்தத்துவம் :-**

காப்புறுதி செய்யப்பட்ட சொத்தொன்றுக்கு மூன்றாம் நபர் ஒருவரின் கவனக் குறைவால் நட்டம் ஏற்படும் பட்சத்தில் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து நட்டஈட்டைப் பெறுவதோடு அம்மூன்றாம் நபர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் காப்புறுதிக் கம்பனிக்கு உரிமை உண்டு என்பதை விளக்குவதாக பதிலாள் வைப்புத் தத்துவம் விளக்குகிறது.

**அண்மைக் காரணங்கள் :-**

காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு சேதம் ஏற்படும் போது அச்சேதம் ஏற்படக் காரணமாக இருந்த காரணம் காப்புறுதி உடன்படிக்கையோடு தொடர்பு உடையதாக இருக்கும் பட்சத்திலேயே காப்புறுதிக் கம்பனி இழப்பீடு வழங்கும் என்பதை எடுத்துக் காட்டுவது அண்மைக் காரணங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பகிர்ந்தளித்தல் தத்துவம் :-**

ஒரு குறித்த சொத்து ஒன்றுக்குப் பல காப்புறுதிக் கம்பனிகளில் காப்புறுதி செய்யப்பட்டுள்ள போது ஏற்படும் நட்டத்துக்கு எல்லாக் காப்புறுதிக் கம்பனிகளும் செய்த ஒப்பந்தங்களின் பெறுமான விகிதாசாரங்களுக்கு அமைய இழப்பீட்டுத் தொகை வழங்கும் என்பது பகிர்ந்தளித்தல் தத்துவம் ஆகும்.

## காப்புறுதியின் வகைகள்

நிச்சயமான மற்றும் நிச்சயமற்ற நிலைமைகளினால் ஏற்படக்கூடிய பணநட்டங்களை ஈடுசெய்து மேலும் நட்டங்கள் பலவற்றைத் தவிர்த்து வர்த்தகத்தின் விருத்திக்கு மாபெரும் உதவியாற்றும் காப்புறுதி வகையினைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. ஆயுட்காப்புறுதி
2. ஏனைய காப்புறுதி
   - (a) தீவிபத்துக் காப்புறுதி
   - (b) கடல் அபாயக் காப்புறுதி
   - (c) விபத்துக் காப்புறுதி
     - (i) மோட்டார் விபத்துக் காப்புறுதி
     - (ii) கள்வர் பயக் காப்புறுதி
     - (iii) சன்னமிடல் காப்புறுதி
     - (iv) பயணமுடைக் காப்புறுதி
     - (v) இடைப்போக்கிலுள்ள பொருட்களுக்கான காப்புறுதி
     - (vi) தகட்டுக் கண்ணாடிக் காப்புறுதி
     - (vii) உற்பத்திப் பண்டப் பொறுப்புக் காப்புறுதி
     - (viii) வேலை கொள்வோரின் வேலையாட்களுக்கான பொறுப்புக் காப்புறுதி
     - (ix) தொழிலாளி நட்டஈட்டுக் காப்புறுதி
     - (x) கடன் காப்புறுதி
     - (xi) வெள்ளக் காப்புறுதி
     - (xii) விமானக் காப்புறுதி
     - (xiii) நம்பிக்கை உத்தரவாதக் காப்புறுதி

## ஆயுட்காப்புறுதி (Life Insurance)

ஒருவரது ஆயுளுக்காக செய்யப்படும் காப்புறுதி ஆயுட்காலக் காப்புறுதி எனப்படுகின்றது. அதாவது குறிப்பிட்ட நபரின் மரணத்தின் காரணத்தால் அவரில் தங்கி வாழ்பவருக்கு நட்ட ஈட்டைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக அமைந்த காப்புறுதியாகும்.

இங்கு காப்புறுதி செய்யப்பட்ட காலத்துக்கும் மேலாக ஒருவர் உயிரோடு இருப்பினும் அக்கால முடிவில் அவருக்கு அல்லது அவரால் பெயர் குறிக்கப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கப்படும்.

மேலும் இக்காப்புறுதி மூலம் நஷ்டஈடு பெறுவது என்பது நிச்சயமாக நிகழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கருதப்படக்கூடிய சம்பவமும் ஆகும். ஏனெனில் மரணம் என்பது எல்லோருக்கும் நிச்சயமானதே.

இவ்வகைக் காப்புறுதியைப் பெறவேண்டுமாயின் ஒருவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளாவன :-

1. காப்புறுதித் தாபனத்திடம் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல்
2. காப்புறுதிக் கம்பனியின் வேண்டுகோளுக்கிணங்க மருத்துவப் பரிசோதனையைச் செய்தல்
3. முதலாம் தவணைப் பணத்தைச் செலுத்திக் காப்புறுதி பூட்கையினை பெற்றுக் கொள்ளுதல்

ஆயுட்காப்புறுதியில் ஒருவர் செலுத்தவேண்டிய ஆயுளுறுதிக் கட்டணத்தை நிர்ணயிக்கும் காரணிகளாவன :-

(1) செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பெறுமதி
